JL
031m211, N03C11
N31·29·11
215025

428

19 JAN 1932

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௨௯] பிரஜோத்பத்தி ஹு புரட்டாசிமீ [பகுதி-௧௧.
Vol. XXIX. September-October-1931. No. 11.

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| மதுரைக் காஞ்சி புட்கூறிய யாமப்பிரிவு:— | ஸ்ரீமத். சி. கணேசையர் | ௩௭௫ |
| பரிசோதனத்தொடர்:— | T. K. இராமாநுஜையங்கார் | ௩௮௧ |
| வாணர்கள்:— | ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர் | ௩௮௭ |
| புறநானூற்றுக் குறிப்பு:— | ,, P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் M.A., Ph.D.L.T. | ௪0௨ |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:— | ஸ்ரீமத். ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணியமுதலியார் | ௪0௭ |
| திருப்பதிக்கோவைச்செய்யுண் முதற்குறிப்பும் விஷயசூசிகையும்:— | உதவிப்பத்திராசிரியர் | ௧௨௫—௧௨௨ |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு:— | | |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4. | [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.
1931.

...thu Raja M. Dinakara Bahadur Avl., and
...y Thiru. Narayana Iyengar, at the
...ower Press, No. 54, New Jail Road, Madura.

21525

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும் இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

# விளம்பரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் சமீபத்தில் அச்சிட்டு விற்பனைக்குச் சித்தம் செய்துவைக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விலை முதலிய விவரக்குறிப்பு:—

| | | |
|---|---|---|
| 1. | வைத்தியசாரசங்கிரகம் (இரண்டாம்பதிப்பு) | ரூ. 5—0—0 |
| 2. | மாறனலங்காரம் | ,, 4—8—0 |
| 3. | வில்லிபாரதம் | ,, 4—0—0 |
| 4. | அகப்பொருள்விளக்கம் | ,, 1—4—0 |
| 5. | திருவாரூருலா. | ,, 0—8—0 |
| 6. | திணைமாலை நூற்றைம்பது. | ,, 0—8—0 |
| 7. | சேதுநாடுந் தமிழும். | ,, 0—6—0. |
| 8. | பொருளதிகார ஆராய்ச்சி. | ,, 1—4—0 |
| 9. | கூடற்புராணம் (முதற்பதிப்பு) | 0—10—0 |
| 10. | மதுரைத்திருப்பணிமாலை (மூன்றும்பதிப்பு) | 0—8—0 |
| 11. | பன்னூற்றிரட்டு (நான்காம்பதிப்பு) | 3—0—0 |
| 12. | அரும்பொருள்விளக்க நிகண்டு (முதற்பதிப்பு) | 1—4—0 |

தபாற்கூலி வேறு. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை. } லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

19 JAN 1932

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-௨௯] பிரஜோத்பத்தி ௵ புரட்டாசி ௴ [பகுதி-௧௧

Vol. XXIX. September-October-1931. No. 11.


## மதுரைக்காஞ்சியுட்கூறிய யாமப்பிரிவு.

யாமத்தை மூன்றாகப் பிரிப்பது தமிழ்வழக்கு. நான்காகப் பிரிப்பது வடமொழிவழக்கு. தமிழ்நூல்கள், முதல்யாமத்தை மாலையாமம் என்றும், இடையாமத்தை நடுநாள்யாமம் என்றும், கடையாமத்தை வைகறையாமம் என்றும் கூறுகின்றன. தமிழ்நாட்டார் ஒருபகலில் ஞாயிறுதோன்றி விடிந்து வெய்யில் முதிரும்வரையுமுள்ள காலத்தை விடியல் என்றும், அதன்மேல் வெய்யில்முதிர்ந்து ஞாயிறு உச்சியை நோக்குதல்தொட்டு, உச்சியைவிட்டிறங்கி வெய்யில்வெப்பங் குறையும் வரையுமுள்ள காலத்தை நண்பகல் என்றும், அதன்பின் வெய்யில் வர வரக் குறைந்து ஞாயிறு படும்வரையுமுள்ள காலத்தை எற்பாடு என்றும் மூன்றாகப் பகுத்து எப்படி வழங்குவார்களோ, அப்படியே ஒரு இரவிலும், ஞாயிறுபட்டதுமுதல் இருள்முதிரும்வரையுமுள்ள காலத்தை மாலையாமம் என்றும், இருள்முதிர்ந்து அர்த்தசாமமாகிப் பின் இருள் வரவரக் குறையும்வரையுமுள்ளகாலத்தை நடுநாள்யாமம் என்றும், இருள் குறைந்து ஞாயிறு தோன்றும்வரையுமுள்ளகாலத்தை வைகறையாமம் என்றும் மூன்றாகப்பகுத்து வழங்குவார்கள். இப்பிரிவு அவ்வாறே என்றும் வழங்குகின்றன. தேவபூசை முதலியவற்றின்பொருட்டு இரவை நான்காகப் பகுத்து வழங்குவது வடமொழிவழக்கு. பிற்காலத்து நூல்செய்த தமிழ்ப்புலவரும் வேற்றுமை தோன்றாது இருவழக்கையும் கலந்து நூல்செய்தனர். கணநூல்முதலியன அவ்

வாறு செய்யப்பட்டனவேயாம். மதுரைக்காஞ்சியுட் கூறிய யாமப் பிரிவை நான்காக, நச்சினார்க்கினியர் வடமொழிவழக்கை மனத்துள் வைத்து உரையியற்றிவிட்டனர். யாமப்பிரிவு கூறிய அடிகளை நோக்கும்போது மூன்றுயாமமே கொள்ளக்கிடக்கின்றன. அதனை ஈண்டுக் காட்டுதும்:—(எடுத்ததைச் சாதிக்கும்படி கூறுகின்றேமென்று கருதாது உண்மையை நோக்குக.) யாமப்பிரிவையுணர்த்தும் அடிகள் வருமாறு:—

"முந்தை யாமஞ் சென்ற பின்றைப்
பணிலங் கலியவிந் தடங்கக் காழ்சாய்த்து
நொடைநவி னெடுங்கடை யடைத்து மடமத
ரொள்ளிழை மகளிர் பள்ளி யயர
நல்வரி யிறாஅல் புரையு மெல்லடை
யயிருருப் புற்ற வாடமை விசயங்
கவவொடு பிடித்த வகையமை மோதகம்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவன ருறங்க
விழவி னாடும் வயிரியர் மடியப்
பாடான் றவிந்த பனிக்கடல் புரையப்
பாயல் வளர்வோர் கண்ணினிது மடிப்பப்
பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்பு
விரும்பிடி மேஎந்தோ லன்னவிருள் சேர்பு
கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோ லடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக ழுளியர் கலனசைஇக் கொட்கும்
கண்மா றாடவ ரொடுக்க மொற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ண ரஞ்சாக் கொள்கையர்



அறிந்தோர் புகழ்ந்த வாண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு நுண்டேர்ச்சி
யூர்காப் பாள ரூக்கருங் கணையினர்
தேர்வழங்கு தெருவி னீர்திரண் டொழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமும்
அசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலிற்
கடவுள் வழங்குங் கையறு கங்குலும்
அச்ச மறியா தேம மாகிய
மற்றை யாமம் பகலுறக் கழிப்பிப்
போதுபிணி விட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் டும்பி போது முரன்றாங்
கோத லந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ணக் காழோர்
கடுங்களிறு கவளங் கைப்ப நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல்லுணாத் தெவிட்டப்
பல்வேறு பண்ணியக் கடைமெழுக் குறுப்பக்
கள்ளோர் களிநொடை நுவல வில்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக்
கண்பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய
வொண்பொ லவிரிழை *தெழிப்ப வியலித்
திண்சுவர் நல்லிற் கதவங் கரைய
வுண்டுமகிழ் தட்ட மழலை நாவிற்
பழஞ்செருக் காளர் தழங்குகுர றோன்றச்
சூதர் வாழ்த்த மாகதர் நுவல
†வேதா ளிகரொடு நாழிகை யிசைப்ப
இமிழ்முர சிரங்க வேறுமா றுசிலைப்பப்
பொறிமயிர் வாரணம் வைகறை யியம்ப
பாணியங் குருகின் சேவலொடு காம

* தெளிர்ப்ப வென்றும் பாடம்.
† வேதாளிய ரென்றும் பாடம்.

ரன்னங் கரைய வணிமயி லகவப்
பிடிபுணர் பெருங்களிறு முழங்க முழுவலிக்
கூட்டுறை வயமாப் புலியொடு குழும
வான நீங்கிய நீனிற விசும்பின்
மின்னுநிமிர்ந் தனைய ராகி நறவுமகிழ்ந்து
மாணிழை மகளிர் புலந்தனர் பரிந்த
பரூஉக்கா ழாரஞ் சொரிந்த முத்தமொடு
பொன்சுடு நெருப்பி னிலமுக் கென்ன
வம்மென் குரும்பைக் காய்படு பிறவுந்
தருமணன் முற்றத் தரிஞிமி றார்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நனைகலஞ் சீப்ப
இரவுத் தலைப்பெயரு மேம வைகறை'' என்பன.

இவற்றிற்கு நச்சினார்க்கினியர் உரைத்த யாமப்பிரிவின் முடிவு வருமாறு:—

"முந்தையாமங் கழிந்தபின்றை, மற்றைப் பதினைந்துநாழிகையை முடிவாகக்கொண்ட கங்குல்யாமத்தையும், மற்றை இடையதாகிய கடவுள் வழங்குங் கங்குல்யாமத்தையும், ஊர்காப்பாளர் அரைநாளமயமும் எழுந்து நயம்வந்து வழங்கலின் பாயினின் வளர்வோர் இனிது கண்மடுப்பப் பகலுறக் கழிப்பி" என்பது.

இப்பொருள் வலிந்துகோடலாமாறு காட்டுதும்:—'முந்தை யாமம் சென்ற பின்றை' என்பது 620-ம் அடி. 'பானாட் கொண்ட கங்குலிடையது' என்பது 631-ம் அடி. இதிலுள்ள 'இடையது' என்பது, இடையே வருகின்ற 'நடுநாளமயமும்' என்பதனோடு கூட்டப்படாது, அதன்பின் வரும் 'கடவுள் வழங்குங் கையறு கங்குலும்' என்னும் 651-ம் அடியோடு முன்வைத்துப் பொருளுரைக்கப்பட்டது. 631-ம், அடியாகிய 'பானாட் கொண்ட கங்குல்' என்பதனோடும், 651-ம் அடியாகிய, 'கடவுள் வழங்குங் கையறு கங்குல்' என்பதனோடும் 653-ம் அடியில் வரும் 'மற்றையாமம்' என்பதில் 'மற்றை' என்பது பிரிக்கப்பட்டு முன்னும், 'யாமம்' என்பது பின்னும் கூட்டப்பட்டது. உம்மை மாற்றி இரு யாமத்தோடும் கூட்டப்பட்டது. இவ்விருயாமமும் கழிப்பி என்பதனோடு முடிக்கப்பட்டன. இனி இடையிலுள்ள 'நடுநாளமயமும், ஊர்காப்பாளர் வழங்கலின' என்பது முன்னுள்ள 'கண் இனிது மடுப்ப'



என்னும் 630-ம் அடியோடு கூட்டி முடிக்கப்பட்டது. அம்மடுப்ப என்பது 653-ம் அடியில்வரும் 'கழிப்பி' என்பதனோடு முடிக்கப்பட்டது. இங்கே இரண்டாம் மூன்றாம் யாமங்களைச்சேர்த்தே நடுநாளமயம் என்றனர் போலும். இனி, 'அச்சமின்றி யேமமாகிய' என்னும் 652-ம் அடி, 633-ம் அடியில்வரும் 'கூற்றக் கொல்தேர்' என்பதனோடு இறுதியில் வைத்துக்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. இங்ஙனம் அடிகளைச் சிதைத்துக்கூட்டியே நான்குயாமமும் வலிந்துகொள்ளப்பட்டது.

இனி, இவற்றிற்கு அடிகளைச் சிதையாமலே நேரே பொருள் கூறி, யாமம் மூன்றுமாறு காட்டுதும்:—(620) 'முந்தை யாமம் சென்ற பின்றை' என்பதன்பின் (653) 'மற்றை யாமம் பகலுறக் கழிப்பி' என்பது வந்து இயையும். ஏனைய இடைவரவாரும். எப்படிப்பட்ட மற்றையாமம் எனின், 'பானாட்கொண்ட கங்குலையிடையிற் கொண்டதாகிய நடுநாளமயத்தும் காவலர் வழங்கலினால் அந் நடுநாட்கங்குலும் அச்சமின்றி ஏமமாகியமைந்துள்ளதாகிய மற்றையாமம் என்க. ஏமம்—காவல். கங்குலும் என்பதிலுள்ள உம்மை சிறப்பு; அச்சத்தின் சிறப்புணர நிற்றலின். உம்மையை மாற்றி, யாமமும் எனக் கூட்டினு மமையும். கங்குலும்—கங்குலாகிய நாளும் என்க. 'கடவுள் வழங்கும் கையறு கங்குலும்' என்பது, நள்ளென்யாமத்தைச் சுட்டி நின்றது; இது, "கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன், வைகலு மேறும் வயக்களிறே—கைதொழுவல், சாலேக வண்ணனைக் கண்ணுறக் காணவெஞ், சாலேகஞ் சார நட" என்பதில், சேந்தனைக் காலேகவண்ணனென்பது சுட்டிநின்றதுபோல. இதனை, நச்சினார்க்கினியர் தொல். சொல். ௫௭-ம் சூத்திரத்தால் முடிப்பர். ஆண்டுக் காண்க. இங்ஙனம் கூறவே, முந்தையாமமும், நடுநாளமயமாகிய மற்றையாமமும், வைகறையும் என யாமம் மூன்றாதல் காண்க. பகல்—ஒருமாத்திரை. பகலுற என்பதற்குப் பகல்போல எனினுமாம். அச்சமின்மையாற் பகல்போலக் கழித்து என்பது கருத்து.

இங்ஙனமே,

"வளமுயம லடுக்கத்து வலனேர்பு வயிரியர்
முழவதிர்ந் தன்ன முழக்கத் தேறோ
டிரவுப்பெயல் பொழிந்த நள்ளென யாமத்
தரவின் பைந்தலை யிடறிப் பானாள்
இரவின் வந்தெம் மிடைமுலை பொருந்தி"

என அகநானூற்றிலும் (328-ம் செ.) வருதல் காண்க. 'நள்ளென் யாமத்துப் பாதிநாளிரவு' என்பதும், 'பானாட்கொண்ட கங்குலை இடையி லுள்ளதாகிய நடுநாளமயமும்' என்பதும் ஒத்தகருத்துடையனவாய் வருதல் காண்க.

'முந்தையாமங்கழிந்தபின்றை, மற்றையாமம் பகலுறக்கழிப்பி' என்பது ஒருதொடராய் இயைந்துநிற்றலும், 'அச்சமின்றி ஏமமாகிய' என்பது மற்றையாமத்துக்கு விசேடணமாய்வருதலே பொருத்தமாதலும் அறிஞர் நோக்கத்தக்கது. 'கூற்றக் கொலைத்தேர் கழுதொடு கொட்ப' என்னும் (633-ம்) அடியில்வரும் 'கூற்றக் கொலைத்தேர் என்பதைப் பிரித்து அச்சமின்றி ஏமமாகிய என்னும் (652-ம்) அடியோடு இயைத்தலை யார் ஒப்புக்கொள்வர். "பேயு மணங்கு முருவுகொண்டு ஆய்கோற்—கூற்றக் கொலைத்தேர் கழுதொடு கொட்ப—இரும்பிடி மேந்தோ லன்ன இருள்சேர்பு" என்பன ஊர்காப்பாளருக்கு விசேடணமாக வந்ததாகக்கோடலே பொருத்தமாம். அங்ஙனங் கொள்ளுங்கால், 'பேயு மஞ்சி வருந்தும் வடிவைக்கொண்டு, கூற்றத்தின் காலசக்கரமும் கழுதும் (அஞ்சிச்) சுழலும்படி இருளைப்பொருந்தி' எனப் பொருள்கொள்க. உயர்ந்த தோற்றமும் இருள்நிறமும் உடையவரென்றபடி. இனி வினைமுடிக்குங்கால் உருவுகொண்டு இருள்சேர்பு ஒற்றி எழுந்து வழங்கலின் என முடிக்க. கொலைத்தேர்க் கூற்றமும் கழுதும் அஞ்சும்படி இருளைப் பொருந்தி என மாற்றினு மமையும். இங்ஙனம் இவ்வடிகளுக்கு நேரே பொருள்கோடலே பொருத்தமாதல் காண்க. இப்பொருள் வலிந்துகோடலன்மையும் அறிஞர்கள் நோக்குவாராக.

இனி, நம்மூரிலே '10 மணியாய்விட்டது, வெய்யில் முதிர்ந்துவிட்டது, வெளியே போகமுடியாது' என்று சொல்லும் வழக்கையும், வெளியே போவோர் 'பொழுது திரும்பி இரண்டுமணியாய்விட்டது, வெய்யில் குறைந்துவிட்டது, இனிப் புறப்படவேண்டும்' என்னும் வழக்கையும் நோக்கும்போது, தமிழருடைய பழைய காலவகுப்பு மிகப்பொருத்தமாதலும் அறியப்படும். நமது யாழ்ப்பாணத்திலே பழைய தமிழ் வழக்குகள் பல இன்னும் மாறாமலிருக்கின்றன.

சி. கணேசையர்.

ஸ்ரீ:

# பரிசோதனத்தொடர்.

சென்ற ஆடிச்செந்தமிழ்ப்பகுதியில் பரிசோதனத்தொடர் என்ற தலைப்பின்கீழ்ச் சிதம்பரப்பாட்டியல் (முதற்பதிப்பு) உறுப்பியல் செய்யுளியல்களிற் றிருத்திக்கொள்ளவேண்டிய சில திருத்தங்களும் பிறவும் வெளியிடப்பட்டன. இப்பகுதியில் அவற்றைத் தொடர்ந்து அச்சிதம்பரப்பாட்டியலின் ஒழிபியலிற் றிருத்திக்கொள்ளுமாறு சில திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

ஒழிபியன் முதற்செய்யுள் "ஆந்தலைசீர்கெடில் ... ... ... ... ... ... ... ... எப்பாவும்" என்பது. அதனுள் நுவலப்படும் விடயவேறுபாட்டால் அது பலசூத்திரமாக வகுத்துக்கொள்ளப்படும். அவற்றுள் முதற்சூத்திரமாக நிற்பது 'ஆந்தலைசீர்கெடில் இகரவு காத்தேய் வொற்றுமாம்' என்பது. இம் முதற்சூத்திரத்துக்கும் ஏனைய சூத்திரங்களுக்கும் முறையே உரைவரைந்து, உதாரணங்காட்டுமிடத்து,

> "வாய்ந்த வுயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
> றேய்ந்து புகுது மியல்புமாம்—ஏய்ந்த
> விறுதி வருமெழுத்தா மீறாா மோரோர்
> மறுவில்பதங் கெட்டு வரும்"

என்பது முதல் உதாரணமாகவும், அதன்பின், "இவ்வெண்பாவினுள்ளுங் குற்றுகரந்தள்ளச் சீர்சிதையாது. 'தடமண்டு' என்பதனுட் குற்றுகர மொற்றலாதவாறு கண்டுகொள்க" என்பது அதுபற்றிய விவரணமாகவும் சிதம்பரப்பாட்டியல் முதற்பதிப்புப் பிரதிகளிற் காணப்படுகின்றன.

இவ் வெண்பாவும் அதன் விவரணமும் சங்கத்து ஏட்டுப்பிரதியினும் இங்ஙனமே உள்ளனவாயினும், இவ்வெண்பாவினுள் ஏய்ந்து, கெட்டு என்றுவரும் குற்றுகரங்களை அலகிடாது தள்ளியவழிச் சீர் தளை சிதைதலானும், அவற்றை அலகிட்டுக்கொள்ளச் சீர் தளை சிதையாமையானும் சீர் தளை கெடுமிடத்துக் குற்றுகரம் அலகிடப்படாமைக்கு வேறுதாரணம் இவ்வெண்பாவின்முன் ஏட்டுப்பிரதியிற் காண்டலானும் இவ்வெண்பாவின் விவரணத்தை 'இவ்வெண்பாவினுள் குற்றுகரங்கொள்ளச் சீர் தளை சிதையாது. தடமண்டு என்பதனுள்ளுங் குற்றுகர மொற்றலாதவாறு கண்டுகொள்க' எனத் திருத்திக்கொள்ளுதல் பொருத்தமுடைத்தென்று தோன்றுகிறது.

மேற்கூறியவாற்றான் 'வாய்ந்தவுயிர்ப்பின்' என்பது குற்றியலுகரம் தளை சீர் கொடாகலிட [illegible] அலகிடப்படுதற் குதாரணமென்பது பெறப் பட்டது. [illegible] கூறியமுறையே குற்றிகர குற்றுகரங்கள் [illegible] அலகிடப்படாமைக்கு உதா ரணங்காட்டாது, [illegible] அலகிடப்படுதற் குதாரணங்கா[illegible] [illegible] பிரதியை யெடுத்து [illegible] மூதற் செய்யுளின் [illegible] என்பதற்கும் இடையே,

'ஆந்தளை [illegible] வேண்டி யது [illegible] தோ[illegible] [illegible]. அ[illegible] குற்றியலுக ரத்தை [illegible] ரர்; அவற்றுள் நேர்பசையும் நிரைபசையும் [illegible]றேவென்னிற் சீரன்று. குற்றியலுகரம் ஒற்றியல்பாதலாற் குற்றியலுகரத்தை நீக்கில் ஓரசையாம்; அஃதெற்றுக்கோவெனில் வெண்பா முடிவு ஓரசையாகிய நாண்மலர்போலக் காசு பிறப்பு—உகரமின்றி முடியாது; அஃதெங் ஙனேயெனில். உருவுக[illegible] [illegible] முருள்பெருந் தேர்க்[illegible] [illegible] என்பதற்று, 'உடைத்து' என்னில் ஆகாது. அ[illegible] [illegible] குற்றியலுகரத்தைப் போலக் கொள்க எவ்வா? "இருவகை யுகரமோ டியைந்தவை வரினே, நேர்பு நிரைபு மாகு மென்ப." 'ஒ ற்றெழுத் தியற்றே குற்றிய லுகரம்', குற்றிய லுகரமு முற்றிய லுகரமு, மொற்றொடு தோன்றி நிற்க வும் பெறுமே' என்று தொல்காப்பியத்துட் சொன்னமையும் "உயிர் வரி னுக்குறள் மெய்விட் டோடும், யவ்வரி னிய்யா முற்றுமற் றெரோ வழி என்று நன்னூலிற் சொன்னமையும், "மாவாழ் புலிவாழ் காமுள வாக மணியிறுவா, போவா தளபெடுத் தூஉவுங் கெழுஉவு முதாரணமா, நாவாழ் பெரும்புகழ் நற்றத்தர் யாப்பி னடந்ததுபோற், றெய்வா முக ரம்வந் தாலியற் சீருக்குச் செப்பியதே" என்று காரிகை யுரைச் சூத் திரத்துட் சொன்னமையுமன்றிக் "குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமு, மொற்று மளபெடையு மிவைநான் குடனகற்றிக்-கற்றோர், நுயிருமுயிர் மெய்யு மென வோதினா ராய்ந்து, செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு" என்பதற் குதா ரணம் "மட்டேத்தான் றெய்த்து மதஞ்சோர்ந்து விட்டக்கே, களியானை கொண்டோ வென்றன் களியானைக், கியாரோ யெதிர்நிற் பவர்" என்று காட்டினமையுங் கண்டுகொள்க. இனி உதாரணம்:—



"திருநன்றி யின்றிவர்க்கியாந் செய்தக்கா ளுனைப்
பெருநன்றி மன்னும் பெரிதேன்—ஒருநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்"

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்"

என்னும் வெண்பாவினுள் குற்றியலிகரத்தை யொற்றுக்கிற் சீர்சிதை யாது.

"கொன்றுகோடுநீடு குருதிபாயவுந்
சென்றுகோடுநீடு செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழ
மென்றுமுடுநீடு பிடியுளபோலும்
அதனால்
ஈண்டிடை யிரவிவ ணெறிவரின்
வண்டுண் கோதை யுயிர்வா ழலவே"

என்னுங் குறளடிவஞ்சிப்பாவினுள் ஆறசைச்சீரும் வந்தமையாற் குற் றுகரங்களை யொற்றகத்தள்ளச் சீர்சிதையாது.

என்ற பகுதி காணப்பட்டது.

இவற்றுள், முதலில் 'ஆந்தளைசிரென்றவிதப்பினுல்' என்று தொடங்குவது, விசேடவுரைப்பகுதியாய்க் குற்றிகர குற்றுகரசம்பந்த முடையதாயிருக்கிறது. சீர் தளை சிதையாவழிக் குற்றிகரம் அலகிடப் படுதற்குமட்டும் உதாரணம் காணப்படவில்லை*; ஏனையவற்றுக்கு

*யாப்பருங்கலவிருத்தியினும், இலக்கணவிளக்கச் செய்யுளியலினும் எடுத் தாளப்பட்ட உதாரணங்களே இந்நூலகத்தும் எடுத்தாளப்படுதலால் ஈண்டும் குற்றிகரம் சீர்தளை சிதையாவழி அலகிடப்படுதற் குதாரணமாக அவ்விருநூல் களினும் காட்டப்பட்ட,

"வந்துநீ சேரி னுயிர்வாழும் வாராக்கால்
முந்தியாய் பெய்த வளைகழலு—முந்தியாங்
கோளாளே கண்டனங் கொல்குறியா யின்னுமோர்
நாளாளே நாம்புணரு மாறு."

என்னுஞ் செய்யுளையும் உரிய இடத்துச் சேர்த்தெழுதிப் படித்துக்கோடல் பொருத்தமாகும்.

உதாரணங்கள் முதற்சூத்திரத்திற் கூறியவாறமைந்துள்ளன. ஆதலால் இவை, மேற்கூறிய ஒழிபியல் முதற்செய்யுளி னிறுதிச்சூத்திரவுரைக்குப் பின்னும் மேற்காட்டிய 'வாய்ந்தவுயிர்ப்பின்' என்று தொடங்குஞ் செய்யுளுக்கு முன்னும் சேர்த்தெழுதிப் படித்துக்கொள்ளத் தக்கனவாயுள்ளன.

இன்னும், ஒழிபியல் முதற்செய்யுளின் நான்காஞ்சூத்திரமாகிய 'ஏய்ந்தவுயி ரோரளபு மீரளபு மாகி யீரசையா மூவசையாம்' என்பதனுரையில் "'செய்யுட்க ளோசை சிதையுங்கால்.........................கொள்' என்றார் பூதபுராணமுடையாரும்." என்றிருப்பது, "'செய்யுட்களோசை சிதையுங்கா லீரளபு, மையப்பா டின்றி யணையுமாம்' என மாபுராணமுடையாரும், 'வெண்பா முதல யாப்பெவற் றினுக்கு, மோரள பார்த்துஞ் சந்தஞ் சிதைந்திடி, னீரள பேற்றுத லிசைநிறைக் கியல்பே' என அவிநயனாரும் ஈரளபுகொண்டாரென்க," என ஏட்டுப்பிரதியிலுள்ளவாறு திருத்திக்கொள்ளத்தக்கதாயிருக்கிறது.

மேலும், ஒழிபியலிரண்டாஞ்செய்யுளின் 5வது சூத்திரமாகிய 'இயங்குமின நெடில் வருக்கம் வரிலெதுகை மோனை' யென்பதற் குதாரணங்காட்டுமிடத்து ௬௮-ம் பக்கத்து நெடின்மோனைக் குதாரணங்காட்டியபின்,

"பகலே, பல்பூங்கானற் கிள்ளையோப்பியும்
.... .... .... .... ....
.... .... .... .... ....
.... .... .... .... ....
போகாதுவழங்குமாரிருணடுநாட்

என்று ஒருசெய்யுள் முற்றுப்பெறாது காணப்படுகின்றது. ௬௯-ம் பக்கத்தொடக்கில் 'தோடாரெல்வளை' என்று தொடங்குஞ்செய்யுள் இடையிட்டெதுகைக்குதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஒழிபியலிரண்டாஞ் செய்யுளின் 5, 6-வது சூத்திரங்களிற் கூறியமுறையில் நெடில்மோனைக்குப்பின் வருக்கமோனைக்கும் அதன்பின் யகர ரகர லகர ழகர வொற் றிடைவந்த ஆசெதுகைகட்கும் உதாரணங்காட்டியதன்பின்பே இடையிட்டெதுகைக் குதாரணங்காட்டன் முறையாதலானும் 'பகலே, பல்பூங்கானல்'என்றுதொடங்கும் ௬௮-ம்



பக்கத்திறுதிச்செய்யுள் விவரணத்துடன் முற்றுப்பெறாதிருத்தலானும் இவைபற்றிருப்பது கண்டு ஏட்டுப்பிரதியுடன் ஒப்புநோக்கியதில் ௬௮-ம் பக்கத்திறுதிக்கும் ௬௯-ம் பக்கத்தொடக்கத்துக்கும் இடையே,

"பேளவத் தன்ன பாயிரு ணீந்தியிப்
பொழுது வருதவை யாயின்
நற்றேர் மார்ப தீண்டலெங் கதுப்பே."

இது வருக்கமோனை. இனி ஆசிடையெதுகை வருமாறு:—

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்து
மேமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே"

இது யகரவொற் றிடைவந்த ஆசெதுகை.

"மாக்கொடி யானையு மௌவற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் பொன்னின் ஞாழலுந்
தூக்கடி கமழ்ந்துதான் றுறக்க மொக்குமே"

இது ரகரவொற்றுசெதுகை.

"ஆவே றுருவின வாயினு மாப்பயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாது மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு."

இது லகரவொற்றுசேதுகை. பிறவும் வந்தவழிக்கண்டுகோள்க*
என்ற பகுதி காணப்பட்டது.

---

* 'பிறவும் வந்தவழிக்கண்டுகொள்க' என்றாரேனும், ழகரவொற் றிடைவந்த ஆசெதுகைக்கு,

"அந்தரத் துன்னே யகங்கை புறங்கையா
மந்தரமே போலு மனைவாழ்க்கை—மந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று"

என யாப்பருங்கலவிருத்தியிலும் இலக்கணவிளக்கச் செய்யுளியலிலும் காட்டப்பட்ட உதாரணத்தையேஇங்கும் சேர்த்தெழுதிப் படித்துக்கோடல் பொருந்துவதாம்.

மேலேகாட்டிய பகுதியில் 'பௌவத்தன்ன ... ... ... ... கதுப்பே' என்பது ௪௮ம் பக்கத்திறுதிச் செய்யுளின் பிற்பகுதியாய் வருக்கமோனைக்குதாரணமாயும் எஞ்சியவை ௸ இரண்டாஞ்செய்யுளின் 6வது சூத்திரத்திற் கூறியவற்றுக்கு உதாரணமாயும் அமைந்து இயை புடையவாயிருத்தலால் அவற்றை ௪௮ம் பக்கத்திறுதிக்கும் ௪௯ம் பக்கத் தொடக்கத்துக்கும் இடையே சேர்த்தெழுதிப்படித்துக் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம்.

இன்னும் ௫௰ம் பக்கத்துக் கடைக்கூழைமுரணுக்குக் 'காவியங் கருங்கட்செவ்வாய்ப்பைந்தொடி' என்று தொடங்குஞ் செய்யுளை உதாரணமாகக்காட்டி அதன் விவாணம் 'முதற்சீரெழுத்தும் மூன்றுசீரும் மறுதலைப்படத்தொடுத்தமையாற் கடைக்கூழைமுரண்' என்று பதிக்கப் பட்டுளது. இதில் முதற்சீரெழுத்தும் மூன்றுசீரும் என்பது இயை பற்றதாயிருக்கிறது.

முதற்சீரொழிந்த மூன்றுசீரும் மறுதலைப்படத்தொடுப்பதே கடைக்கூழைமுரணாதலாலும், காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந் தொடி' என்பதில் முதற்சீரொழிந்த மற்றை மூன்றுசீரும் முரண்பட் டிருத்தல் வெளிப்படையாதலாலும் மேற்காட்டியவிவாணத்தில் முதற் சீரெழுத்தும் என்றிருப்பதை முதற்சீரொழித்து என்று திருத்திக்கொள் ளுதலே அமைவுடையதாம்.

இங்ஙனம்,

திரு. கி. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

---

௨

# வாணர்கள்.

[சோமசுந்தர தேசிகர்.]

வாணர் என்ற பேருடைய ஒரு அரச பரம்பரையினர் ஒரு காலத்திலே சுயேச்சையுடைய அரசர்களாயும் ஒரு காலத்திற் சிற்றரசர்களாயும் வாழ்ந்துவந்திருக்கின்றனர் என்ற செய்தி இலக்கியங்களாலும், கல்வெட்டுக்களாலும் அறியக்கிடக்கின்றது. இவர்கள் ஆதியில் ஆளத் தொடங்கின காலம் இதுவெனத் திட்டமாகக் கூறமுடியாவிடினும் கிறிஸ்து பிறந்து முதலிரண்டாம் நூற்றுண்டுமுடிய வாழ்ந்த ஒரு வகுப்பினர் என்று கூறுதல் தவறுகாது.

ஏறக்குறையக் கி. பி. இரண்டு மூன்றும் நூற்றுண்டில் ஆட்சி புரிந்தவனுகக் கருதப்படும் கரிகாலனுக்கு இரண்டுதலைமுறை பின்னுண்ட கிள்ளிவளவன் பட்டமகிஷி, ஒரு மாவலிவாணன்மகள் சீர்த்தி யென்பாள் என்று மணிமேகலை கூறுநிற்கும்.[1] இச் சீர்த்தியே மணிமேகலையைச் சிறைவைத்தவள்.[2] இவள் மகனை உதயகுமாரன்றான் மணிமேகலையின்பொருட்டு விஞ்சையனுல் பளிக்கறைப்பக்கத்திலே வெட்டுண்டவன்.[3] கிள்ளிவளவன் சீர்த்தியை மணந்துகொள்ளுமுன்னரே வாணர்கள் சீருஞ் சிறப்பும் உடையராய் வாழ்ந்திருக்கவேண்டும் என்பது இதனுல் விளங்கும். மாடமாமதுரையின் அணித்தாகத் தஞ்சாக்கூர்[4] என்றோர் ஊர் உண்டு. அவ்வூரிலே மாவலிவாண வமிசத்தினன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் பெருங்கொடையாளி; அவனைத் தொண்டைமண்டலத்துச் செங்காட்டுக்கோட்டத்துத் துறையூரில் வாழ்ந்த பொய்யாமொழிப்புலவர்[5] கோவைப்பிரபந்தம் ஒன்று பாடிப் புகழ்ந்தனர். அந்நூலுக்குத் தஞ்சைவாணன்கோவை யென்று

---

[1] மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி யென்னுந் திருத்தகு தேவியோடு (மணி. 19. 54-55).

[2] மணிமேகலை 22வது காதை

[3] ௸ 23வது காதை

[4] மானமதுரைக்கு அருகிலுள்ளது.

[5] தொண்டைமண்டல சதகம் 18.

பெயர். இவ்வாணர்கள் மதுரைநாட்டிற் சிறப்புற வாழ்ந்தகாலம் கி. பி. பதினைந்து பதினாறும் நூற்றூண்டாகும். இதற்கு முன்னும் அவர்கள் பாண்டிநாட்டில் வாழ்ந்துவந்தனராயினும் தலைவர்களாக இருந்தனரே யொழிய அரசாளவில்லை. கி. பி. 15, 16-ம் நூற்றூண்டிலே அரசாட்சி செலுத்தியதற்கு ஆதாரங்களுண்டு. பதினாறும் நூற்றூண்டிற்குப் பிற்பட்டு இவர்கள் அந்நாட்டிலிருந்ததாகக் கேள்விப்படவில்லை. ஆகவே இந்த வாணவமிசத்தினர் கி. பி. இரண்டாம் நூற்றூண்டுமுதல் பதினாறும் நூற்றூண்டுமுடிய இருந்து வாழ்ந்த ஒரு பெரும் வகுப்பினர் என்பது வெள்ளிடை விலங்கலாகும். இவர்கள் தங்களை வாணனுடைய வமிசத்தினர் என்று சொல்லிக்கொள்வதற்கு ஆதாரமாக, 'மூவுலகிலுமுள்ள சுரர் அசுரர் என்ற இருவகையினர்க்கும் மேம்பட்ட சிவபிரானது துவாரபாலக (வாயிற்காவல)னை பலிச்சக்கரவர்த்தியினது வழித்தோன்றல்'கள் என்று தங்களைக் கூறுகின்றனர். அதற்கேற்ப அவர்கள் மெய்க்கீர்த்திகளில்,

ஸகல ஜகத்ரயாபிவந்தித ஸுராஸுரா தீஶ பரமேஶ்வர

ப்ரதிஹாரீக்ருத மஹாபலி குலோத்பவ ஸ்ரீமகாவலிவாண

ராயர்[6] என்று கூறிக்கொள்கின்றனர்.

இவர்கள் ஆண்ட நாட்டுக்கு வாணகப்பாடி என்று பெயர். அதனைப் பெரும்பாணப்பாடி[7] யென்றும், வடுகவழிமேற்கு[8] என்றும், வடுகவழி 12000[9] என்றும் கூறுவர். இவ்வரசர்களுக்கே பெரும்பாணரென[10] ஒரு பேரிருந்ததால் அவர்கள் ஆண்ட நாட்டிற்குப் பெரும்பாணப்பாடி யென்றும், இந்நாடு வடுகநாட்டிற்குச்செல்லும் பெருவழிக்கு மேற்கிலிருந்ததால்[11] வடுகவழி மேற்கு என்றும், இந்நாடு 12000 கிராமங்களுடைமையால்[12] வடுகவழி 12000 என்றும் பேர்பெற்றது. தொண்டைமண்டலத்திலுள்ள படுவூர்க்கோட்டம், குன்றபத்திரக்கோட்டம், வேங்கடக்கோட்டம் முதலாயின இந்நாட்டைச் சார்ந்தவை. வடஆற்காடு ஜில்லாவிலோடும் பாலாற்றின் வடக்கிலுள்ள பகுதியும் மைசூர்

[6] S. I. I. III. 91. [7] S. I. I. iii 98. [8] Ep. Ind. XI. 224. [9] S. I. I. iii. 91.
[10] Ep. Ind VIII. 35, 515. [11] ஆந்த்ரபத பஶ்சிமதோ தக்ஷிணதஃ
[12] I. A. 15. 175, முடியனூர்ச் செப்பேடு.



நாட்டுக் கோலார்ஜில்லாவின் ஒருபகுதியும் கொண்டது பெரும்பாணப்பாடியாகும். இந்நாட்டுக்கு மேற்கில் கங்கபாடியும் கிழக்கில் பல்லவராச்சியமும் இருந்தது.

இவர்கள், பாலாறு உற்பத்தியாகும் நந்திமலைப்பக்கத்திலிருந்து முதன்முதலாக வந்தவர்களென்பர்.[13] அம்மலையே மலையாகவும், விடைக்குறியான ரிஷபலாஞ்சனையே முத்திரையாகவும், கலைமான்கொடியுருவாகவுமுடையவர்கள்.[14] இவர்கள் சிவபிரானது வாயிற்காவலன் வழித்தோன்றல்களாகவே, சைவசமயிகளாவர். மிகமிகப் பிற்காலத்தில் இவர்கள் வைஷ்ணவசமயத்தை அடைந்ததாகச் சிலர் கூறினும் அதற்குப் போதிய ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. கல்வெட்டுக்களிலிருந்து பூர்வத்தில் இவர்களுடைய தலைநகர் பரிவிபுரி என்று தெரிகிறது. பரிவி, பரிகிபுரம்,[15] பழவி[16] யென்பன அதன் வேறு பெயர்கள். இந்தப் பட்டினம் இதுபொழுது இதுவெனத் திட்டமாகத் தெரியாதபோதிலும் கர்நூல்ஜில்லா ஹிந்துப்பூர் தாலூகாவிலுள்ள பரிவியென்ற ஊராகவிருக்கலாமென ஊகிக்கின்றனர்.[17] ஆனால், பிற்காலத்தில், படுவூர்க்கோட்டத்திலுள்ள திருவல்லம் என்ற ஊர் வாணபுரம்[18] என்ற பேரோடு வழங்கிவந்திருப்பதால் அதுவே தலைநகராக விருந்திருக்கவேண்டுமென்பது சரித்திரக்காரர் கருத்தாம்.

இவ்வாணர்கள் சோழர்களைப்போலவே தொன்றுதொட்டுவந்த ஒரு பழங்குடியினரே யாயினும், இவர்கள் கொடிவழி (வமிசாவளி) யைக் கூறக்கூடிய சாதனங்கள் ஒன்றுமில்லையென்றே கூறவேண்டியிருக்கின்றது. ஆயினும் பல வாணர்கள் பல தானங்கள் செய்தும் பல போர்களிற் கலந்து மிருக்கின்றனர். சாலிவாகன சகம் 261 ல் ஸ்ரீ வடுவல்லப மல்லதேவ நந்திவர்மன் தனது இராச்சியபாரத்தில் இருபத்துமூன்றும் ஆண்டு விளம்பிவருஷ கார்த்திகைமீ கிருஷ்ணத்ரயோதசி சோம

[13] நந்திமலை கோலார்ஜில்லா சிக்பள்ளம்பூர் தாலூகாவில் நந்திதுர்க்கம் என்று வழங்குகிறது.

[14] வ்ருஷபத்வஜ: பசுபதிரிவ வ்ருஷலாஞ்சந: ஶைவாகம ப்ரதிஷ்டிதஃ ; S. i. i ii. 384.

[15] Nellore Inscriptions p. 1201. [16] 194 of I. I.

[17] A. E. I. XI 231. [18] S. i. i. III 105, 108.

வாரத்தன்று கோலார் ஜில்லாவிலுள்ள முல்பகல் தாலூகா முடியனூர்க் கிராமத்தைப் பாரத்வாஜ கோத்திரத்து ஸ்ரீபட்டசர்மன் வகையினர்க்கு முற்றூட்டாக வழங்கியதாக ஒரு செப்பேடு கூறும்.[19] மைசூர் இராஜ்யத்திலுள்ள கோலாரைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட கங்கர்களில் ஒருவனான கொங்குணிவர்மன் வாணர்களை ஜயிக்கத்தோன்றினன் என்று காணப்படுகிறது.[20] இந்தக் கொங்குணிவர்மன்காலம் ஐந்தாம் நூற்றாண்டென்பர் அறிஞர். புங்கனூர்நாட்டிலுள்ள கோயாத்தூர் என்றவிடத்தில் வாணவமிசத்தைச் சார்ந்த மாவலிவாணராயனுக்கும் கங்கவமிசத்து மாதவமுத்தரயனுக்கும் போர் நடந்ததாகக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன[21]. இது நடந்தகாலம் எட்டாம்நூற்றாண்டின் முற்பகுதியெனச் சரித்திரக்காரர் குறித்திருக்கின்றனர். நீதிமார்க்கக் கொங்குணிவர்மன் என்ற கங்கவரசனுடைய சிற்றரசனான நுளம்பாதிராஜனுடைய படைத்தலைவன் சுமார் கி. பி. 890-ல் ஒரு வாண அரசனைத் தோற்கடித்திருக்கின்றான்.[22] கி. பி. 770-ல் ஒரு வாணவரசன் கங்கர் ஆறாயிரத்தை யரசாண்டதாக ஒரு கல்வெட்டுண்டு.[23] பெருமானடிகள் என்ற ஒரு கங்கவரசன் ஒரு வாணனோடு போர்புரிந்து அவனுக்குரியநாட்டைப் பிடுங்கிக்கொண்டான். இவ்வாறு தலைமுறைதலைமுறையாகக் கங்கர்களும் வாணர்களும் போர்புரிந்துவந்தாலும் பெண் கொடுக்கல் வாங்கலும் செய்துவந்தார்கள் என்று கூறக்கூடிய சாதனங்களுண்டு. பிரபுமேருவான இரண்டாம் விஜயாதித்தன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தன்* கங்கவமிசத்து முதலாம் பிருதிவிபதியின்மகளை மணந்துகொண்டான். இவர்களுடைய மகனே புகழ்விப்பவர்கண்டனான விஜயாதித்தன் III. இப்படிப் பலர் காணப்பட்டாலும் உறவின்முறையைக் குறிக்குஞ் சாதனங்களொன்றுமில்லை.

இனி, வாணநாட்டுக்குக் கீழ்புறமிருந்த பல்லவராச்சியத்தையாண்ட பல்லவ அரசர்களோடு வாணர் வைத்துக்கொண்ட சம்பந்தத்திலிருந்தாவது வமிசாவளி அறியலாகுமோ வென்றாலும் அதுவும் இயலாத

[19] I. A. 15 p. 175. [20] S. I. I. II 384, S. 13. [21] Epi car. Kolar, B. P. 13. [22] Epi. car. K. P. 79. [23] Ibid. Kolar B. P. 86.

*இவனை முதலாம் விக்கிரமாதித்தனென்று கல்வெட்டுத்துறையார் கணக்கிடுவர். இவனுக்கு முன்னரும் விஜயாதித்தன் விக்கிரமாதித்தன் என்ற பேருடையார் பலருண்டு.



தொன்றாகவிருக்கின்றது. வாணர்கள் பல்லவர்கள்பலத்துக்குத் தக்கவாறு அவர்களுக்குச் சிற்றரசர்களாகவோ தனியரசர்களாகவோ இருந்திருக்கின்றனர். ஏறக்குறையக் கி. பி. 700-ல் ஆண்ட நரசிங்கவர்மன் காலத்தில் ஸ்கந்தபாணாதிராஜனென் றொருவன்[24] இருந்திருக்கின்றான். நரசிங்கன் பின்வந்த பரமேசுரவர்மன்காலத்தில் காரோணரி வாணராஜனென் றொருவன் காணப்படுகின்றான். ஆனால் பல்லவன்பெயர் ஈசுரவர்மனென்று காணப்படுகின்றது.[25] நந்திவர்மனுடைய 23-ம் ஆண்டில் விக்கிரமாதித்த மாவலிவாணராயர் வடுகவழிமேற்குப் பிருதுவிராஜ்யஞ்செய்தாரென்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[26] திருவல்லம் கல்வெட்டொன்றில் 'கோவிஜயநந்திவிக்கிரம பன்மர்க்கு யாண்டு அறுபத்திரண்டாவது ஸ்ரீமாவலிவாணராயர் வடுகவழி பன்னீராயிரமும் ஆண்டார்[27]' என்று காணப்படுகின்றது. நந்திவிக்கிரமவர்மன் நாற்பத்தொன்பதாவது ஆண்டில் விஜயாதித்தமாவலிவாணராயர் பிருதிவிராஜ்யஞ் செய்தாரென்று குடிமல்லம் கல்வெட்டொன்று கூறுகிறது[28] 'கோவிஜய நந்திவிக்கிரமபன்மர்க்கு யாண்டு ௰எ-வது படுவூர்க்கோட்டத்து மீயாறுநாட்டுத் தீக்காலிவல்லமுடைய பரமேசுவரர்க்கு இக்நாட்டு ஐம்பூணியும், விளத்தூரும் இத்தேவர் தேவதானம் அமரூன்றிமங்கலமும், விடேல்விடுகு விக்கிரமாதித்த சதுர்வேதிமங்கலமென்னும் பேரால் ஏகக்கிராமமாக மாவலிவாணராயனான விக்கிரமாதித்த மாவலிவாணராயன் விண்ணப்பத்தாலும் காடுபட்டித் தமிழ்ப்பேரையன் ஆணத்தியாலும் ஏகக்கிராமமாக்கி' என்று திருவல்லத்திலுள்ள ஒருகல்வெட்டில்[29] காணப்படுகின்றது. இக்கல்வெட்டிற் காணப்படும் விஜயநந்திவிக்கிரமவர்மன் தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மனாகவிருத்தல்கூடுமென்று பலகாரணங்களைக்கொண்டு பெரியார் நிச்சயித்திருக்கின்றனர். நந்திக்குப் பின்வந்த 'நிருபதுங்கவர்மற்கு யாண்டு இருபத்துநாலாவது ஸகல ஜம த்வ............மகாபலி குலோத்பவ ஸ்ரீவாணவிஜயாதாமஹாபலி வாணராயர் வடுகவழியின் மேற்குப் பிருதுவிராஜ்யஞ்செயாநின்றார்'[30]. என்று குடிமல்லத்துக் கல்வெட்டொன்று கூறுகிறது. 'சகலதிரயாபி.... ...மகாபலி குலோத்பவ ஸ்ரீவாணவித் (தியா) தார் மகாதேவடிகளாயின

[24] Ep. In. XI 235. [25] Ibid. VII 25. [26] Ibid. XI 224. [27] S. I. I. III 91. [28] Ep. In. XI 225. [29] S. I. I. III 93. [30] Ep. In. XI 227.

மாரச..........ம்மடிகள் மகனுர் விஜயாதித்த மகாபலிபாணராயர் பிருதிவிராஜ்யஞ்செய சக யாண்டு எண்ணூற்றிருபதாவது' என்று குடிமல்லம் கல்வெட்டொன்று கூறுகிறது. ஸ்வஸ்திஸ்ரீ சகயாண்டு 827 ஆவது விஜயாதித்த வாணராயர் பிருதிவிராஜ்யஞ்செய என்று அவ்வூர் மற்றொரு கல்வெட்டு[31] கூறுகின்றது. மகாவலிவாணராஜர் சகயாண்டு எண்ணூற்றொருபதாவது என்று திருவல்லம் கல்வெட்டொன்று[32] கூறுகிறது. இவ்வாறு வாணர்கள் பல்லவர்கீழ்ச் சிற்றரசராக ஆண்டு வந்திருந்தாலும், பின்கண்ட இக்கல்வெட்டு வாசகங்களினின்றும் நிருபதுங்கன்காலத்திலும் அவனுக்குப்பின்னும் பல்லவாதிக்கம் குலைந்து விட்டதென்றும் வாணர்கள் தாங்களாகவே ராஜ்யாதிகாரம் செய்யத் தொடங்கிவிட்டனரென்றும் அறியக்கிடக்கின்றது. இவ்வாறு பல வாணர்கள் காணப்பட்டாலும் அவர்களுடைய உறவின்முறைவாலாறொன்றும் காணப்படவில்லை.

ஆயினும் விக்கிரமாதித்தன் உதயேந்திரம் செப்பேடுகள் எனச் சில செப்பிதழ்கள் உள[33] அவற்றில் ஒரு வமிசாவளி குறிக்கப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:—

பலி
|
வாணன்
|
வாணாதிராஜன்
|
ஜயநந்திவர்மன்
|
விஜயாதித்தன்
|
மல்லதேவன் என்ற ஜெகதேகமல்லன்
|
வாணவித்யாதரன்
|
பிரபுமேருதேவன்
|
விக்கிரமாதித்தன், வாணவித்யாதரன்
|
விஜயாதித்தன், புகழ்விப்பவர்கண்டன்
|
விஜயபாகு விக்கிரமாதித்தன்

[31] E. I. XI 228. [32] S. I. I. III 95. [33] E. I. III 74.



மேலேகுறித்த கல்வெட்டுக்களிற் காணப்படும் பல்லவ அரசர்களோடு சமகாலத்தவர்களாகக் காணப்படும் வாணர்வரிசையைக் குறிப்பாம்

| பல்லவர். | வாணர். |
|---|---|
| 1. நரசிம்கவர்மன் 690–710.* | ஸ்கந்தவாணாதிராஜன் |
| 2. பரமேசுவரவர்மன் 710–717 (ஈசுரவர்மன்) | காரம்னேரி பாணராஜன் |
| 3. நந்திவர்மன் II 717–779 | 23ம் ஆண்டு விக்கிரமாதித்த மாவலி வாணராயன். 63ம் ஆண்டு மாவலி வாணராயன். |
| 4. தந்திவர்மன் (779–830) | விஜயாதித்தன். |
| 5. நந்திவர்மன் III 830–854 | விக்கிரமாதித்தன். |
| 6. நிருபதுங்கவர்மன் 854–870 | வித்யாதரன் |
| 7. அபராஜிதன் 870–900 | விஜயாதித்தன். \| விக்கிரமாதித்தன். |

மேலேகாட்டியவர்களுள்ளே நந்திவர்மன்காலத்திற் காணப்படும் விக்கிரமாதித்தனுக்கு ஜயமேரு என்றொரு பட்டமுண்டு.[34] வடஆற்காடுஜில்லா புங்கனூரிற் காணப்படும் சில கல்வெட்டுக்களில் மகாபலி வாணராஜ—விக்கிரமாதித்த—பாணகந்தர்ப்ப ஜயமேரு என்றும், மகாபலி பாணராஜ பாணவித்யாதரனென்றும், மகாபலி பாணராஜ விஜயாதித்த—வீரசூளாமணி—பிரபுமேரு என்றும் வாணர் பெயர்கள் காணப்படுகின்றன. நந்திவர்மன் பல்லவமல்லன்காலத்திற் காணப்படும் விக்கிரமாதித்தனுக்கு ஜயமேரு என்ற பட்டம் உண்டென்று மேலே குறித்துள்ளோம். ஆகவே புங்கனூரில் காணப்படும் விக்கிரமாதித்த—பாணகந்தர்ப்ப—ஜயமேருவும் இவனும் ஒருவராகல்வேண்டும். இது உறுதிபெறுமாயின் உதயேந்திரம் வாணபட்டயத்திற்கண்ட புகழ்விப்பவர்கண்டனை விஜயாதித்தனும் புங்கனூரில் காணப்படும் விஜயாதித்த-வீரசூளாமணி-பிரபுமேருவும் ஒருவராகல்வேண்டும். வீரசூளாமணி என்பதும் புகழ்விப்பவர்கண்டன் என்பதும் ஒருவாறு ஒற்றுமையான பட்டங்கள். அன்றியும் இவனது பாட்டன் ஒரு பிரபுமேரு.

*ஈண்டுக் குறிப்பிட்ட ஆண்டுகள் P. T. ஸ்ரீநிவாஸையங்காரின் பல்லவ சரித்திரப்படி; பல்லவர்களில் 1. 680–700; 2. 700–710; 3. 711–775; 4. 775–826; 5. 826–849; 6. 849–875; 7. 875–883 என்று காணப்படுகிறது. [34] S. I. I III 99.

இவனது தகப்பன் ஒரு ஜயமேரு; அதனால் இவன் பிரபு மேருவாகிறான். இவைகளாலே வாணர்கள், பரகேசரி ராஜகேசரி என்ற பட்டங்களைப்போலப் பிரபுமேரு, ஜயமேரு என்ற பட்டங்களை வகித்து வந்தனரென்று காணலாம். இவைகளையன்றி உதயேந்திரத்திற் கண்ட இரண்டாம் பிருதிவீபதி செப்பேட்டால் சோழபெருமானடிகளான பராந்தகன், விக்கிரமாதித்தன் விஜயாதித்தன் என்ற இருவர்களைத் தோற்கடித்து, அவர்கள் நாட்டையும் கைக்கொண்டு அதனைக் கங்க அரசன் பிருதிவீபதிக்குக் கொடுத்ததுமன்றி அவனுக்குச் செம்பியன் மாவலி வாணராயன் என்ற பட்டமும் சூட்டினான்[35] என்று அறிகிறோம்.

இந்தச் செப்பேட்டு விஜயாதித்தன் விக்கிரமாதித்தன்மகனாக வேண்டும். இதற்குப் பிறகு வாணர்களே இந்நாட்டிற் காணப்படவில்லை. ஆகவே மேற்கூறியவைகளால் வாணர்கள் தங்கள் நாட்டினின்றும் கடைசியாகப் பராந்தகனால் துரத்தப்பட்டார்களென்று ஏற்படும். இதுகாறும் கூறியவைகளிலிருந்து பின்வரும் வம்சாவளியை ஒருவாறு குறிக்கலாம்.

பலி
|
வாணன்
|
ஸ்கந்த? வாணாதிராஜன்
ஜயநந்திவர்மன்
|
காரோணரி வாணராஜன்?
|
விஜயாதித்தன் I
|
ஜகதேகமல்லனான மல்லதேவன்
|
விக்கிரமாதித்த மாவலிவாணன் I
வாண வித்யாதரன்
|
பிரபுமேரு
|
விக்கிரமாதித்தன் II ஜயமேரு
பாணகந்தர்ப்பன்—பாணவித்யாதரன்
|
விஜயாதித்தன் II புகழவிப்பவர்கண்டன்
பிரபுமேரு—வீரசூளாமணி
|
விஜயபாகு விக்கிரமாதித்தன் III
|
விஜயாதித்தன் IV
பாணவித்யாதரன்

[35] S. I. I. II 383-387.



இனி குலோத்துங்கன், வீரநாராயணன், சங்கிராமராகவன் என்பன போன்ற பட்டங்களையுடைய சோழபெருமானடிகளான முதலாம் பராந்தகனால் நாடுகடத்தப்பட்ட வாணர்கள் இருபிரிவினராகப் பிரியலாயினர். ஒருபிரிவினர் வடக்கே நெல்லூர்ஜில்லா சென்று தங்கினர்.[36] ஒரு பிரிவினர் பாலாற்றைக் கடந்து தெற்கே வந்து நடுநாட்டில் தங்கினர். திருமுதுகுன்றம், திருக்கோவலூர், திருவாமாத்தூர் முதலியன நடுநாட்டுத்தலங்கள். இவர்கள் தங்கியவிடத்திற்குத் தங்கள் பழையநாட்டுப் பெயரான வாணகப்பாடி என்ற பெயரையிட்டு வழங்கலாயினர். இவ்வாணகப்பாடி தென்னாற்காடு ஜில்லாவில் ஒரு பகுதியும், சேலத்தில் ஒரு பகுதியும், வடஆற்காட்டிலொருபகுதியும் கொண்டது. ஆயினும், இவர்கள் சுயேச்சையுடைய அரசர்களாகாது தலைவர்களாகவே இருந்துவந்தனர். முன்போலவே இவர்களது வம்சாவளியைக் குறிக்கக்கூடிய ஆதாரமொன்றும் இதுகாறும் கிடைத்திலது. எனினும், வாணகோவரையர் என்ற பட்டத்தோடு பலர் காணப்படுகின்றனர். அவர்களுட் சிலரை ஈண்டுக் குறிக்கின்றேன்.

வாணராஜ அழகமய்யன் என்பவன் பார்த்திவேந்திரவர்மனுடைய தலைவன்.[37] மழவன்* நரசிம்மவர்மனான இராஜ ராஜ வாணகோவரையன்[38] முதலாம் இராஜாதிராஜன்கீழ்ச் சிற்றரசன். இந்த வாணகோவரையனே நெற்குன்றம் என்றவூரில் ஏரி கட்டினவன்.[39] அவன் தனனை, ஸகல ஸாம்ராஜ்ய ஸம்பந்ந விஜயஸ்ரீ ஸமேத மஹாவம்ச மஹா ராஜ மஹாபலிகுலதிலக ஸ்ரீநரஸிம்ஹவர்மண: ஸ்ரீ ராஜராஜ ஹ்ருதயாநந்தந தீக்ஷா தீக்ஷித வாணகோவராஜ வெங்கடேஸ்வர ஸஹாய என்று கூறிக்கொள்கிறான். வீரராஜேந்திர கரிகாலசோழனது 27 ம் ஆண்டில் ஜம்பையென்ற ஊரில்† உள்ள கல்வெட்டொன்று வீரவர்மனான வாணராயன் தானமொன்று செய்ததாகக் கூறுகிறது. ராஜராஜன்மகன் ராஜேந்திரன்காலத்தில் வாணகோப்பாடி மதுராந்தகவளநாடு[40] என்று பெயரிடப்பட்டது. முதலாங்

[36] Nellore Inscriptions p. 201. [37] M. E. R. 1906. Part II Para 46; 327 of 06. *மழவர்களும் வாணர்களுள் ஒரு பிரிவினராயிருக்கலாமென்று தோன்றுகிறது. கண்டராதித்தர் மனைவி ஒரு மழவரையன்மகளார். †துறையிலாண்ட வாணர்கள் மழவரையர்கள். [38] 86 of 06. [39] 84 of 06. இது வீரராஜேந்திரபுரம் என்று பேர்பெறும். [40] 82 of 06.

குலோத்துங்கனால் இதே வாணகப்பாடி ராஜேந்திரவளநாடு[41] என்று பேரிடப்பட்டது. இந்தக் குலோத்துங்கன்காலத்தில் ஒரு வாணகோவரையன் காணப்படுகிறான்.[42] அவன்மகன் விக்கிரமசோழன் காலத்தில் ஒரு வாணகோவரையன் காணப்படுகின்றான்.[43] இவன் நாளிலே மகாபலிவாணராய[44]னென்றும், விருதராஜ பயங்கர வாணகோவரையனென்றும்[45] இருவர் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. பின்னவனுக்கு சுத்தமலன் முடிகொண்டான் என்று பேருமுண்டென்று தெரிகிறது. மூன்றாங்குலோத்துங்கன்காலத்தில் குலோத்துங்க வாணகோவரையன் என்றவன் ஒரு தலைவனாயினும் அவன் மற்றுஞ் சில தலைவருடன் சேர்ந்துகொண்டு அரசனுக்கு விரோதமாகக் கலகஞ்செய்து வந்தானென்று தெரிகிறது.[46]. இவன் சோழனால் அடக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த வாணகோவரையர்கள் அக்காலத்தில் குலோத்துங்க சோழனுடைய சிறந்த வீரர்களாக விருந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. இவர்களுட் சிலர் மதுரைப்பக்கமும் சிலர் காஞ்சீபுரம் பக்கமும் சென்றனர்.

குலோத்துங்கசோழனுக்கு முன்னாண்ட ராஜாதிராஜன்காலத்தில் மதுரையிலே சோழர் உதவிபெற்று ஆண்ட பாண்டியர்களிலே பராக்கிரம பாண்டியனுக்கும் குலசேகரனுக்கும் பாண்டிய சிங்காதனத்தைப்பற்றிச் சச்சரவு உண்டாயிற்று. பராக்கிரமபாண்டியன் சிங்களத்தரசனாகிய பராக்கிரமபாகுவைத் துணைவேண்டினான். அவன் தன் தண்டநாயகனை இலங்காபுரியை ஒரு சேனையொடு அனுப்புமுன்னே குலசேகரன் ஒருசேனையை யெழுப்பிப் பராக்கிரமன் இருந்த இடத்தை முற்றுகை

[41] 68 of 06.

[42] "வாசி கொண்டரசர் வார ணங்கவர
வாண கோவரையன் வாண்முகத்
தூசி கொண்டுமுடி கொண்ட சோழனொரு
சூழி வேழமிசை கொள்ளவே."—கலிங்கத்துப்பரணி 352.

[43] "புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்கப்—புல்லார்தந்
தாங்கு மடகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும்"—விக்கிரமசோழனுலா, 76,77.

[44] 545 of 04. [45] S. I. I. V No. 673. [46] 435 of 13.



யிட்டு அவனைப் பெண்டுபிள்ளைகளோடு கொன்றனன். இதனைக் கேள்வியுற்ற இலங்காபுரி தண்டநாயகன் கோபங்கொண்டெழுந்து இராமேசுவரம் முதலான இடங்களைப் பிடித்துக்கொண்டு மதுரைநோக்கி வந்தான். குலசேகரன், சுந்தரபாண்டியன் பாண்டியராஜனென்றிருவரை யனுப்பினான். அவர்களிருவரும் லங்காபுரி தண்டநாயகனால் தோற்கடிக்கப்பட்டனர். மறுபடியும் குலசேகரன் ஒரு பெருஞ்சேனையை யெழுப்பிக்கொண்டு தானே போருக்குச்சென்று தோல்வியடைந்து சோழநாட்டுள் புகுந்து இராஜாதிராஜனைத் துணைவேண்டினான்.

கொலையுண்ட பராக்கிரமபாண்டியனது கடைசிமகனாகிய வீரபாண்டியன் குலசேகரன்கையிலகப்படாமல் சேரநாட்டில் ஒளிந்துகொண்டிருந்தான். அதனையறிந்த இலங்காபுரி அவனுக்கு ஆளனுப்பி வரவழைத்து அவனைப் பாண்டியசிங்காதனமேற்றி யரசாண்டுவந்தான். சோழ ராஜாதிராஜனைத் துணைவேண்டின குலசேகரனது வேண்டுகோட்கிணங்கி அவன் 'பாண்டியனார் குலசேகரதேவர் தம்முடைய இராஜ்யம்விட்டுச் சோழராஜ்யத்திலே புகுந்து "என்னுடைய ராஜ்யம் நான் பெறும்படி பண்ணவேண்டுமென்று சொல்ல;" இவர் உடையார் ... ... ... ... வரம்பெறும்படி பண்ணக்கடவராகவும்' என்று குளத்தூழான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியாரான பல்லவராயருக்குக் கட்டளையிட அவர் 'இந்த ராஜ்யத்திலே புகுந்து கைக்கொண்ட இலங்காபுரி தண்டநாயகன் உள்ளிட்டாரைக் கொன்று பாண்டியர்கள் இருப்பான மதுரைவாசலிலே இவர்கள் தலை தைப்பிக்கக் கடவராகவுஞ் சொல்லி, இப்படி எல்லாம் விண்ணப்பஞ்செய்து திருவுள்ளமானபடியே பாண்டியனார் குலசேகரதேவர் சோழராஜ்யத்தில் இருந்தநாளில் இவர்க்கு வேண்டுவனவெல்லாம் குறைவறச்செய்து பரிகரித்துப் பலத்தாலும் பாண்டிநாடு கைக்கொண்டு தாஞ்சொன்னபடியே இலங்காபுரி தண்டநாயகன் உள்ளிட்டாரைக் கொன்று இவர்கள்தலை மதுரைவாசலிலே தைப்பித்துப் பாண்டியனார் குலசேகரதேவர் மதுரையிலே புகுகைக்கு வேண்டுவனவும் பாண்டியராஜ்யத்துச் செய்வித்து இவரை மதுரையிலே புகவிட்டுப் பாண்டியநாடு சோழநாடாகாது பரிகரித்து ... ... ... ... காரியங்கொண்டு நிர்வகித்தார்.'[47]

[47] Q. J. M. S. XIX 57—66.

இவ்வாறு குலசேகரன் பாண்டியசிங்காதனமேறியபின்னும் வீர பாண்டியன் கலகஞ்செய்துகொண்டிருந்தான். குலசேகரன் இறக்கவே அவன்மகன் விக்கிரமபாண்டியன் பாண்டியராஜனானன். அப்பொழுதும் சோழருதவி பாண்டியர்களுக்கு வேண்டியிருந்தது. வீரபாண்டியனும் மறுபடி சிங்களவர் உதவியைவேண்டச் சிங்களவரும் உதவிக்கு வந்தார்கள். சோழநாட்டிலும் இராஜாதித்தன் இறந்துபோக அவனது இளவல் மூன்றாங்குலோத்துங்கன் சோழசக்கரவர்த்தியானான். அவனும் ஒரு சேனையை அனுப்பி விக்கிரமபாண்டியனுக்கு உதவி செய்தான். பாண்டிநாட்டிலே நடந்த போரிலே குலோத்துங்கன் வீரபாண்டியன் அணிந்திருந்த முடியைப் பறித்து அவன்மக்களையும் அடக்கினான். மறுபடியும் வீரபாண்டியன் கலகஞ்செய்தபொழுது தான் குலோத்துங்கன் வீரபாண்டியனைக் கொன்று கலகத்தை யடக்கினான். மறுபடியும் கலகமுண்டானபடியினாலே தானே பாண்டியநாட்டுக்கு அரசனாய் முடிசூடி வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் செய்துகொண்டு ஆணைசெலுத்தினான்.

இந்தக் காலத்திலும் இதற்குமுன் பாண்டியர்நாளிலும் செங்கோல் இனிது நடக்கும்பொருட்டுக் குலோத்துங்கன் தன் தலைவர்களுள் சிறந்தவரான வாணகோவரையர்களுள் ஒருபகுதியினரைப் புதுக்கோட்டைப்பக்கத்தில் நிறுவினான்[48] இவர்கள் மகதர் என்றும் மகதைப்பெருமாளென்றும் தங்களைச் சொல்லிக்கொள்ளுகின்றனர். பாண்டியர்களால் இந்த வாணர்கள் பெரிதும் நன்குமதிக்கப்பட்டுச் சமரகோலாகலன் புவனேகவீரன் என்ற பட்டங்களையும் பெற்றனர். இராஜநாராயணன் என்னும் புவனேகவீரன் பிரான்மலைக்கோயிற் கோபுரம் கட்டினான்[49] குடுமியாமலையில் வெட்டப்பட்டுள்ள சில

[48] சோழராஜ்யம் குன்றப் பாண்டியர் தலையெடுத்த நாளையில் ராஜராஜ வாணகோவரையன் என்பான் பாண்டியரோடு சேர்ந்துகொண்டதாகத்தோற்று கிறதென்றும் பாண்டியர் மதுரையை வாணகோவரையர்வசம்விட்டுத் திருநெல்வேலியைத் தலைநகராகக்கொண்டனரென்றும் ஸ்ரீ. அ. கோபிநாதராவ் அபிப்பிராயப்படுகிறார். (J. A. S. I. 6, 53.) குலோத்துங்கன் 1261 முதல் 72 வரை நடந்த போர்களின் முடிவாக இவர்களை அங்கு நிறுவினான் என்பது டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அபிப்பிராயம் (History of the Nayaks of Madura Note P. 78.) [49] 218 of 24.



செய்யுள்கள் வாணகுலோத்தமன், வீரமாகதன், மகதேசன் என்பவனைப் புகழ்ந்து கூறுகின்றன[50] வடக்கே சென்ற வாணர்கள் காஞ்சிபுரத்திற்கு அருகில் தங்கினார்கள். அவர்களுள் ஒருவன் பொன்பரப்பினான மகதைப்பெருமாள் என்று பேருடையவன். இவன் செயல்களைப் புகழ்ந்து செய்யுள்கள் திருவண்ணாமலை[51] நாரத்தாம்பூண்டி[52] முதலான விடங்களிற் காணப்படுகின்றன. இவர்களுள் ஒருவன் மூன்றாம் இராஜராஜன்காலத்தில் அவன்தலைவர்களில் ஒருவனான சிங்கண்ண தண்டநாயகனோடு சேர்ந்துகொண்டு கலகஞ்செய்து இராசராசனைத் திருப்பாதிரிப்புலியூருக் கருகிலுள்ள சேந்தமங்கலத்தில் அடைத்துவைத்திருந்தான். இராசராசனுக்குப் பெண்கொடுத்தமாமனான போசள நரசிம்மதேவன் II இச்செய்தியைக் கேட்டவுடன் ஒரு படையை யெழுப்பி அப்பண்ண தண்ணக்கன் சமுத்திரக்கோப்பையன் என்ற தண்டநாயக்கர்வசம் அனுப்பினான். அவர்கள் படையெடுத்துவந்து மகதராச்சியம் நிர்மூலமாடி இவனையும் இவன் பெண்டு பண்டாரமும் கைக்கொடு பாச்சூரிலே விட்டதாக ஒரு கல்வெட்டுக்[53] கூறுகிறது. இராஜராஜன் வலியிழந்தபின்னும் இவர் சிங்கண தண்டநாயகனான கோப்பெருஞ்சிங்கன் கீழ்த் தலைவர்களாக இருந்திருக்கின்றனர்.

புதுக்கோட்டைப்பக்கத்திற்றங்கிய வாணகோவரையர்கள் பாண்டியர்களுக்கு உதவிசெய்துகொண்டே யிருந்திருக்கின்றனர்[*] எனினும் கலியுகத்தில் சாலிவாகன சகாத்தம் ௲௨௱௪௰௭-க்குக் (1247) கொல்லமழிந்த ஆண்டு 501-க்கு மேல் ருத்திரோத்காரிவருஷம் ஆனிமீ வடக்கே டில்லியிலிருந்து ஆதிசுலுத்தானும் மலுக்குநேமியான் என்பானும் வந்து பராக்கிரமதேவரை (பாண்டியனை)ப் பிடித்துக் கட்டிக்கொண்டு டில்லிக்கு அனுப்புவித்துப்போட்டு ராச்சியத்தைக் கட்டிக்கொண்டார்கள். ருத்ரோத்காரிஸூ ஆவணிமீ முதல் குரோதன வருஷம்வரைக்கும் வருஷம் மூன்றுக்கு ஹிமஸ்லேது பரியந்தம் துலுக்காணியமாக இருந்தது. பின்பு விஜயநகரத்தாசர்கள் புகுந்து துலுக்கர்களை வெருட்டிடித்தபின் விஜயநகரத்தாசர்கள் பிரதிநிதியாக 'சகாப்தம் 1327-க்கு

[50], [51] செந்தமிழ் Vol. III. [52] 367, 368, 375 of 25. [53] திருவேந்திரபுரம் கல்வெட்டு 142 of 02. [*] மாறவர்மன் சுந்தரபாண்டியன்காலத்திலேயே மழவராயர் என்ற வாணாதிராயர்கள் தலைவர்களாயிருந்தனர் என்று தெரிகிறது, 556 and 557 of 26.

மேற்செல்லாநின்ற சுபானுவருஷம்முதல் விபவவருஷம் வரைக்கும் வருஷம் 47-க்கு லக்கண்ணநாயக்கர், மதனநாயக்கர் இராஜ்யம் ஆண்டார்கள். அப்பால் சகாப்தம் 137?-க்குமேற் செல்லாநின்ற சுக்கிலவருஷம் முதல் நளவருஷம் வரைக்கும் வருஷம் 48 பாண்டியராஜாவினுடைய வைப்பாட்டி காளையார்கோவில் தாசி அபிராமிவயிற்றுப்பிள்ளை சுந்தரத்தோள் மாவலி வாணாதிராயர் காளையார் சோமனார் அஞ்சாத பெருமாள் முந்தரசர் திருமலைவாணாதிராயர்நாளையில் (இவர்களை) லக்கண்ணநாயக்கர் கொண்டுவந்து பாண்டியனுக்குப்பிறந்தபிள்ளை* என்று பட்டங்கட்டிவைத்துக் கையெடுத்துக் கும்பிட்டு ராஜ்யத்தையும் அவர்கள் கைவசப்படுத்திக்கொடுத்து ராஜ்யம் ஆண்டார்கள்.

அப்பால் சகாப்தம் 1422-க்கு மேற்செல்லாநின்ற பிங்களவருஷம் வைகாசிமீ நரசய்யநாயக்கர் வந்து ராமேசுவரம் சேவித்துக் கோட்டையும் கைவசப்படுத்தினார் என்று மதுரைத்தலவரலாறு[54] கூறும்.

மேலேகண்ட லக்கண்ணநாயக்கர் விஜயநகரத்தரசர் பிரதிநிதியாவர். இவர் தன்னை இராஜப்பிரதிநிதியென்றும் தக்ஷிணசமுத்திராதிபதியென்றுங் கூறிக்கொள்கிறார். விஜயநகர இராஜ்ய ராஜப்பிரதிநிதியானாலும் பழைய பாண்டியர்களை வைத்துக்கொண்டே அரசாட்சியைநடத்திவந்தாரென்று தோற்றுகிறது. மேலேகூறிய திருமலைவாணாதிராயர் என்பவர் திருமாலிருஞ்சோலைநின்றான் வாணாதிராயராக விருக்கலாமென்று தோற்றுகிறது.† இவர் சீவில்லிபுத்தூரில் சகம் 1350 ல் தானம் ஒன்று செய்ததாக ஒரு கல்வெட்டு[55] கூறுகின்றது. இவரே திருவாலவாயுடையார் திருக்கோயிலில் சில திருப்பணிகள் செய்ததாகத் தெரிகிறது.[56] இவர்மகன் சுந்தரத்தோளுடைய வாணாதிராயர்,[57] இவர் சீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்கு வேண்டும் நிவந்தங்கள் வைத்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[58] விக்கிரமபாண்டியன் டில்லிக்கு அனுப்பப்பட்டபின் அவனுக்குப்பின்னர் வந்த பாண்டியர்கள் பலவீனரா

* சேர்பிரதாராயர் முதலியவர்கள் அபிராமிவயிற்றுப்பிள்ளை சுந்தரத்தோள் மாவலி வாணாதிராயர் என்றுகொண்டு இவர் எப்படிவந்திருக்கக்கூடுமென்று ஐயுறுகின்றனர். லக்கண்ண கொண்டுவந்து சிம்மாசனமேற்றின பாண்டியனுடைய பிள்ளையின்பெயர் ஈண்டுக் குறிப்பிடவேயில்லை. சுந்தரத்தோள் மாவலி வாணாதிராயருள்ளிட்டதலைவர்கள்முன்னிலையில் அவர்களுடன்படச் சம்மதித்துச்செய்தகாரியமேயொழிய வேறொன்றுமில்லை. [54] பக். 1–3. † மதுரைத்தலவரலாறு. [55] 572 of 26. [56] திருவாலவாயுடையார் திருப்பணிமாலை, மாவலி–1. [57] 573 of 26. [58] 577, 583 of 26.



யிருந்து திருநெல்வேலிப்பக்கம் சென்றுவிட்டார்களென்று தோற்றுகிறது. அதனாற்றான்போலும் சுந்தரத்தோளுடைய மாவலி வாணாதிராயன் இராச்சியமாளத்தொடங்கித் தன்னைச் சார்வபௌமன் என்று கூறிக்கொள்கிறான்.[59] இவன் கி. பி. 1474 வரை அரசாட்சி செய்திருக்கின்றான். உறங்காவில்லிதாசன் வாணாதிராயன் என்று காணப்படும் கல்வெட்டு[60] இவனையே சுட்டும். இவன் காலத்திலும் திருவாலவாயில் பல திருப்பணிகள் நடந்தேறின.[61] இவன் வில்லிபுத்தூரில் சூடிக்கொடுத்தநாச்சியார்கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்கள்கட்டினான்.[62] இவனுக்கு மழவராயன் என்று ஒரு பேருமுண்டு. இவனுக்குப்பின் இவன்மகன் திருமாலிருஞ்சோலைநின்றான் வாணாதிராயன் ஆளத்தொடங்கினான். இவன் சகம் 1399-ல் கி. பி. 1477 விளம்பிவருஷ வைகாசிமீ 20உ அழகர்மலையிலிருக்கையில் சூடிக்கொடுத்தநாச்சியாருக்கு ஆடித்திருவிழா நடக்க மாங்குடியின் பழம்பெயர்நீக்கிச் சுந்தரத்தோளனல்லூர் என்றுபெயரிட்டு நிவந்தமாக வைத்தான்.[63] ஆயினும் வெகுகாலம் அரசாண்டதாகச் சொல்வதற்கில்லை. விஜயநகரத்தரசர்கள் பிரதிநிதியாக நரசய்யநாயக்கர் வந்தபிறகு இவர்கள் அவர்களுக்குள்ளடங்கி வாழ்ந்துவந்ததாகத் தெரிகிறது. இவன் 1527 வரையில் அரசாண்டுவந்தான் என்ற செய்தி திருப்புல்லாணி, தேவிபட்டினம் முதலியவிடங்களிற் காணப்படும் கல்வெட்டுக்களால்[64] தெரிகிறது. இவனும் திருவாலவாயிற் சில திருப்பணிகள் செய்துள்ளான்.

இவனுக்குப்பின் இவன்மகன் இரண்டாம் சுந்தரத்தோளுடைய வாணாதிராயன் தலைவனானான். அவன் கி. பி. 1528 முதல் 1546 வரையிருந்ததாகத் தெரிகிறது. இவனுடைய 1533, 1534ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள்[65] திருப்புல்லாணி முதலானவிடங்களிற் காணப்படுகின்றன. இந்த நால்வருள் ஒருவர்பேரிலேதான் பொய்யாமொழியார் தஞ்சைவாணன்கோவை பாடியிருக்கவேண்டும். இவ்வாறு வாணர்கள் வெகு நீண்டகாலம் அரசர்களாகவோ சிற்றரசர்களாகவோ வாழ்ந்துவந்ததால் இவர்கள் தமிழகத்திலவாழ்ந்த ஒரு பழங்குடியினரென்பது விளங்கும்.

---

[59] M. E. R. 1926 p. 114 and 568 of 26. [60] 578 of. 26
[61] திருப்பணிமாலை, மாவலி. உ. [62] 583, 584 of 26.
[63] 578 of 26. [64] 113 of 03; 455 of 06. [65] 121 and 109 of 03,

உ

# புறநானூற்றுக்குறிப்பு.

———:(o):———

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., Ph. D., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[௩௧௪-ம் பக்கத் தொடர்ச்சி].

15. கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்
.... .... .... .... ....
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கி
னொளிறு மருப்பிற் களிறவர
காப்புடைய கயம் படியினை
யன்ன சீற்றத் தனையை யாகலின்
விளங்கு பொன் னெறிந்த நலங்கிளர் பலகையொடு
நிழல்படு நெடுவே லேந்தி யொன்னு
ரொண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையி
னற்பனுவ னால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கண் ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும வாருற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவிற்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய் நினக்கே.



முதுகுடுமிப்பெருவழுதி பகைவர்நாட்டின் நல்லரண்களைக் கழுதைப்புல்லினங்களாற் பாழ்செய்து, விளைவயல்களைக் குதிரைகளால் அழித்துக் காவலுள்ள வாவிக்கண் தன் பெரும் யானைகளைப் படிவித்தனன் என்றும், அவனது தூசிப்படையை எதிர்த்த பலர் தோல்வியடைந்தனர் என்றும், அவ்வரசர்கோமான் பல்யாகங்களைச் சிறப்புற நடாத்திப் பல யூபங்களை நட்டனன் என்றும், தன்னை யணுகிய விறலி முதலியோர்க்குத் தக்க பரிசில் அளித்தனன் என்றும் இப்பாட்டிற் கூறுகின்றனர் நெட்டிமையார்.

அரசன் தானேசென்று பகைவர்நாட்டையழித்தபின்னர்த் தூசிப்படை ஆங்காங்குச் செல்லற்குக் காரணம் என்னை? யாகங்களை முடித்த பின்னர் யூபம் நட்டது எவ்வாறு பொருந்தும்? என்ற இரண்டு ஐயங்கள் உண்டாகின்றன. அன்றியும், 'யூபம் நட்ட வியன்களம் பலகொல்' 'நின் தூசிப்படையை யெதிர்த்து வசைபடவாழ்ந்தோர் பலர்கொல்' என்பது இப்பாட்டின்கருத்தாயின், யூபம்நட்ட வியன்களம் பலகொல், நீ யழித்த ஒன்னார் பலர்கொல் என்று கூறியிருத்தல் நேரிதாயிருக்க இவ்வாறு ஏன் அவர் கூறினரென்ற வினவிற்கும் விடையிறுக்கவேண்டியதாகின்றது.

ஈண்டு 'மாண் வீயாச்சிறப்பின் வேள்வி' என்றது அரசர்களுக்குச் சிறந்த அசுவமேதயாகத்தைக் குறிக்கலாம்; 'அரசன் ஸார்வபௌம காமனாயிருப்பின் அசுவமேதஞ் செய்க'* என்று சிரௌத சூத்திரங்களிற் கூறியிருத்தல் இங்குக் கருதத்தக்கது. அவ்வாறு அயமேதமென்ற வேள்வியே இச்செய்யுளிற் குறிக்கப்படுவதாயின், அரசன் வேள்விபுரிதற்குமுன் குதிரையைத் தூசிப்படையுடன் நாடுமுழுதும் விடுதல் விதியாம். அவ்விதிக்கு ஏற்பப் பெருவழுதியும் தூசிப்படையை விடுத்தான் என்னலாகும். இவ்வாறு கொள்ளின் 11-ஆம் அடியிலுள்ள 'ஆகலின்' என்ற சொல்லும் பொருந்தும். அரசனை நேரில் எதிர்க்க வலியற்ற பகைவர் அவன் தம் நாடுகளை அழித்தமையாற் சினங்கொண்டு அவனது தூசிப்படையை யெதிர்க்கத்தலைப்பட அத்தானையையும் வெல்லமாட்டாது மாற்றார் வசைபடத் தோற்றனரென்று கொள்ளுதல் சாலும்.

---

*ஸார்வபௌம: காமோ அச்வமேதேந யஜேத (தைத்திரீய ச்ரௌத ஸூத்திரம்.)

வேள்வி முற்றி யூபம் நடுதல் பொருந்தாதாகலின் யூபம் என்பதற்கு வெற்றித்தூண்† என்பது பொருளாகக் கொள்க: கொள்ளின் அரசன் பல அயமேதங்களை இயற்றிப் பலநாடுகளில் தன் வெற்றித் தூண்களை நாட்டினன் என்று கொள்ளலாகும்.

20, 21ஆம் அடிகளை நோக்கின் இவ்வரசன்பெயருக்கு அசுவமேதம் இயற்றிய என்ற அடைமொழியுங் கூட்டலாமோ?

எயில், தேஎத்து என்ற சொற்கள் முறையே இரண்டாம்வேற்றுமை, ஏழாம்வேற்றுமை உருபுதொக்க சொற்களாம். அவை வினையின் பின்னர் வழங்குதலை,

'ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான' (தொல். சொல். 105)

என்ற சூத்திரத்திரத்தாற் கொள்க.

பாவடியான் என்னுமிடத்து ஆன் உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது.

அவர என்பது பலவின்பாற்குறிப்புவினையாலணையும்பெயர்.

படியினை என்ற தன்வினை படிவித்தனை என்ற பிறவினைப்பொருளில்வந்தது.

பொன் என்பது ஆகுபெயராய்ப் பொன்னாற்செய்த ஆணி பட்டத்தைக் குறிக்கின்றது.

எறிந்த என்ற செய்வினை எறியப்பட்ட என்ற செயப்பாட்டுவினைப் பொருளில் வந்தது.

யூபம்:—'ஆவோ டல்லது யகர முதலாது' (தொல். எழுத். 65) என்று தொல்காப்பியர் கூறியிருக்க, இங்கு நெட்டிமையார் 'யூபம்' என்ற சொல்லை வழங்கியிருப்பாரா என்பது ஆராய்ச்சிக்கு வருகின்றது. அவர் பாடிய செய்யுளுள் தற்சமச்சொற்கள் இல்லாமையின் 'யூபம்' என்றவிடத்து 'ய்' என்பது உடம்படுமெய்யாக வந்திருக்கலாம்.

---

† யூபம் என்ற சொல்லை வெற்றித்தூண் (ஜயஸ்தம்ப:) என்ற பொருளில் வடமொழிப்புலவர்பெருமான் காளிதாஸன் ஆஷாடஸ்ய ஜீவ நிவாத யூபே (ரகுவம்சம், 6, 38) என்ற விடத்தில் வழங்கியிருத்தலும் ஸப்த கல்பத்ருமத்தில் அப்பொருள் கூறியிருத்தலுங் காண்க.



உயர்திணை அஃறிணை இரண்டற்கும் பொதுவாக 'யாஅல' என அஃறிணையை நெட்டிமையார் வழங்கியது,

'பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே' (தொல். சொல். 51)

என்ற சூத்திரத்தாற் கொள்ளலாம்.

வேதம், ஆவுதி, களம் என்பன முறையே வேத:, ஆஹுதி:, கல: என்பனவற்றின் தற்பவமாம்.

16\. வினைமாட்சிய விரைபுரவியொடு
... ... ... ... ...
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
யெல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கஞ்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்ற
... ... ... ... ...
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய
வோராங்கு மலைந்தன பெருமநின் களிறே.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் குதிரைப்படை சிறந்த குதிரைகளுடனும் மேகம்போன்ற கேடகங்களுடனும் பகைவர்நாடு சென்று முன்னுள்ள விளைவயல்களைக் கொள்ளையூட்டிப் பின்னர்க் காவன்மரங்களை விறகாகுமாறுவெட்ட, அவன் யானைகள் காவலுடைய வாவிகளிற் படிய, நாடு அழியுமாறு தங்கிய அவனது பெருஞ்சேனையாற் கொளுத்தப்பட்ட தீயின் ஒளி ஞாயிற்றின் ஒளிபோல்தோன்ற, அவன் முனைத்துக்கு ஏற்பக் களிற்றுப்படைகள் பகைவரை எதிர்க்க, அரசன் தானைவேண்டாது போரில் வென்று, சீற்றத்தில் முருகக்கடவுள் போன்று வாளில் புலாலுடனும் மார்பில் சந்தனத்துடனும் விளங்கி வளம்பொருந்திய பகைவர்நாட்டை எதிர்த்தனன் என்று பாண்டரங்கண்ணனார் இச்செய்யுளில் அவ்வரசனைப் புகழ்கின்றனர்.

17-ஆம் அடியிலுள்ள 'ஊட்டினை' என்பதனை வினையெச்சமாக்கி, அடுத்த அடியிலுள்ள செய்ய என்பதனுடன் கூட்டி, மலைந்தன என்பதனை முற்றுவினையாகக் கொண்டனர் உரைகாரர். இச்செய்யுளில் அரசனுடைய களிற்றுப்படையினும் அரசனைச் சிறப்பித்துக் கூறுதல் சிறந்ததாகலின் மலைந்தன என்பதனை வினையாலணையும்பெயராய்க் களிற்றுடன்கூட்டி, நல்லமர்செய்யுந்தொழிலைக் களிற்றின் தொழிலாய்க் கொண்டு, ஊட்டினை என்பதனை முற்றுவினையாகவே கொள்ளலாம்.

இனி, ஊட்டி படீஇ இவ்விரண்டும் ஊட்ட, படிய என்ற பொருளில் வந்தன என்று கொள்ளின் நலமெனத் தோற்றுகின்றது.

'எல்லுப்பட இட்ட சுடுதீ யென்றதனைத் தானைக்கு அடையாக்குக' என்ற உரைவாக்கியத்தின் கருத்து சுடுதீயிடுதல் தானையின் செயல் என்பதே.

குருசில் என்பது,

'எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே
நின்ற ஈற்றய னீட்டம் வேண்டும்.' (தொல். சொல். 144)

என்ற சூத்திரப்படி இங்கு குருசில் என்றிருத்தல்வேண்டும். உயிரீற்றுச்சொற்கள் அண்மைவிளியில் இயற்கையாயிருத்தல்போல (தொல். சொல். 127), லகரவீற்றுச் சொல்லும் அண்மைவிளியில் இயல்பாயிற்று என்று கூறல்வேண்டும். அவ்வாறாயின் அவ்வழக்குத் தொல்காப்பியர் காலத்துக்குப் பிற்பட்டதாகும்.

நாம் என்பதற்கு அச்சம் என்று பொருள் என்பது,

'பேநா முருமென வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள' (தொல். சொல். 365),

என்ற சூத்திரத்தால் விளங்கும். நாம என்பது நாம் என்பதினின்று பிறந்த பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயராகும்.

சேக்கரின் என்றவிடத்து 'இன்' ஒப்புப்பொருளில்வந்தது.

தானை, ஏமம், அமர் என்பன முறையே ௪௯௯, ௪௯௮, ௬௧௦ என்பவற்றின் தற்பவமாம்.

(தொடரும்)

உ

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௨௭௮-ஆம் பக்கத் தொடர்ச்சி).

## தாரை புலம்புறு படலம்.

இறந்த வாலியைக் கண்டு அவன்மனைவி தாரை புலம்புதலைக் கூறுவது.

### இறந்த வாலிமீது அவன்மனைவி தாரை அழுதுவிழுதல்.

[இராமன், சுக்கிரீவன்கையைப்பற்றி, அங்கதனைக் கூட்டிக் கொண்டு, வாலியிறந்த இடத்தினின் றகன்றுபோனான். வாலியின் மரணத்தைக் கேட்டு, அவன்மனைவி தாரை வந்து அவன்மேல் அலறி விழுந்து புரண்டெழுந்து புலம்பலுற்றாள்.]

### தாரை புலம்பல்.

இன்பமலைமேல் வாழ்ந்தேன்! துன்பக்கடலுள் வீழ்ந்தேன்! எனல்.

491 "வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்,
கரைசே ரிடர் வேலை கண்டிலேன்;
உரைசேர் ஆருயி ரே!என் உள்ளமே!
அரைசே! யான்இது காண அஞ்சினேன்."

இ-ள். "(என் உயிருக்கு) உயிரானவனே! (என் உள்ளத்துக்கு) உள்ளமானவனே! (அடிமையான எனக்கு) ஆண்டவனானவனே! (யான் உன்னைமணந்த அந்நாள்தொட்டு இந்நாள்மட்டும்) எப்பொழுதும் உனது மலைபோன்ற தோள்மேலே (இனிதே) தங்கியிருந்தேன். (இதுவரை) கரையில்லாத துன்பக்கடலைக் காணாதேன் (ஆன) யான், (அந்தக் கடலுள் ஆழச்செய்யும்) இந்தக் காட்சியைக் காணப் பயப்படுகின்றேன்!"

வரை-மலை. நாளும்-எந்நாளும்—எப்பொழுதும். வைகுதல்—தங்குதல். இடர்-துன்பம். வேலை-கடல். உரை-புகழ். ஆருயிர்-அருமையான உயிர். உள்ளம்-மனம். அரசு-அரசன்; எதுகை நோக்கி 'அரைசு' எனப் போலியாகின்றது. இதுபோலக் கைபடைப் படலத்தில் 'உரைசெய்யும்' என்ற பாட்டில் 'அரைசு' என வந்தது.

காண்க. எதுகையில் நிற்றல்பற்றிச் 'சேர்' ஒத்த என்றும், 'சோா' இல்லாத என்றும் பொருள்படுகின்றன. 'இது', (—'இந்தக் காட்சி'— உன்னை இந்நிலைமையிற் காணுதல்.) தாரை கரையற்ற துன்பக்கடலுள் அழுந்துதற்குக் காரணமான வாலிமரணத்தைக் குறிப்பாலுணர்த்தியது. காண்கிலேன், காண்கலேன் என்பனவும் பாடங்கள்.

தாரை வாலியினது தோள்மலைமேல் வாழ்ந்தேனென்றதனால், அவன் அவளை அம்மலைமேல் ஆடும் மயில்போலப் பாராட்டிவந்தானென்பது போதரும்.

வாலி இறக்குமுன், தாரை சிலசமயங்களில் அடைந்த துன்பங்கள் முடிவுடையனவாய் (எனவே, மறக்கக்கூடியனவாய்)க் கரையேறக்கூடிய கடல்போன்றிருந்தனவென்பதும், அவன் இறந்த துன்பம் முடிவில்லாததாய் (எனவே, என்றும் மறக்கமுடியாததாய்)க் கரையில்லாத கடல் (ஒன்று உளதாயின், அது) போன்றிருந்ததென்பதும் புலப்பட, இதன் முன் கரைசேர் இடர்வேலை கண்டேனன்றிக் 'கரைசேரா இடர்வேலை கண்டிலேன்' என்றாள்.

துன்பத்தைக் கரைபேற முடியாத கடலென்பதனினும் (இல் பொருளுவமையாகக்) கரையில்லாத கடலென்பது துன்பத்தின் கடுமையைச் சிறப்பாகக் கூறுவதாயிருக்கும் நயம் கூர்ந்து நோக்குதற்குரியது.

வாலிதோளாகிய இன்பமலைமீது மகிழ்ந்து வாழ்ந்த தாரையாகிய மயில் அவன் இறத்தலாகிய துன்பக்கடலுள் வீழ்ந்தது அதி பரிதாபமானதென்னுங் கருத்துக்கிடமாய் முதலிரண்டடிகள் அமைந்திருக்கும் நயம் கண்டுகளிக்கத்தக்கது.

'நீ இறந்தது' என்ற எண்ணத்தை வாயினாற் கூறமாட்டாளாய், 'இது' என்றாள். இவ்வாறு குறிப்பாகக் கூறியது, தசரதன் கைகேயியைநோக்கி 'இராமன் காட்டுக்குப் போவதாகிய வார்த்தை மற' என்று கூறக்கருதி, இராமன் காட்டுக்குப்போவது என்பதை வாய்விட்டுரைக்க மனமொருப்படாதாய் 'மற்றையதொன்றும் மற' என்று கூறியதை நினைவுக்கு வரச்செய்கின்றது.



நீ இறந்தபின் யான் இருக்கின்றேன் :
சீவன்போனபின் தேகம் சீவித்திருக்குமோ? எனல்.

492 "அயரா லேதொலை யாத என்னையும்
பயிரா யோபகை யாத பண்பினோய்,
செயிர்தீ ராய்,விதி யான தெய்வமே!
உயிர்போ னால்,உட லாரும் உய்வரோ!"

இ. ள். "(எக்காலத்தும் யான்செய்த குற்றங்களைப் பொறுப்பதன்றி, அக்குற்றங்களுக்காக, என்னை வெறுத்து) விரோதியாத (மேன்மைக்) குணமுடையானே! (நீ இறந்த) துன்பத்தினாலே (இறந்து) தொலைந்தொழிந்துபோகாத (தனால் உன்வெறுப்புக்குரியளாய்க் கடைப்பட்ட) என்னையும் அருவராதிருப்பாயோ! விதியே! (இந்த நல்லோனை அகாலமரணமுறச்செய்த குற்றமுடையநீ, ஒருகாலும் அந்தக்) குற்றம் நீங்கமாட்டாய்! (இது நிற்க. என உயிர்—ஆன இவன்—இறந்த பின், யான் இறவாதிருக்கின்றேன். இது ஆச்சரியம்.) உயிர்போனால், உடம்பு வாழ்ந்திருக்குமோ? (உரைப்பாயாக, அனைத்துக்கும் காரணமாயுள்ள விதியே, நீ அறியாததொன்றுமில்லையாதலால்.)"

அயர்—துன்பம். பயிர்த்தல்—அருவருத்தல் பயிர்தல்—அழைத்தல். உம்மை இழிவுசிறப்பு பயிராய்—அருவாய்; அழையாய். செயிர்—குற்றம்; கோபம்; துன்பம். தீர்தல்—நீங்கல். தீர்த்தல்—நீக்கல். செயிர்தீராய்—(1) குற்றம் நீங்கமாட்டாய், (2) கோபம் நீங்குவாயாக; (3) துன்பத்தை நீக்குவாயாக (1) எதிர்மறைவினைமுற்று. (2) உடன்பாட்டுத் தன்வினை ஏவல்; (3) உடன்பாட்டுப் பிறவினை ஏவல். உய்தல்—சீவித்திருத்தல். 'அபாயே பகையோடு மன்பினோய்', 'செயிர் தீராவிதி' என்பனவும் பாடங்கள்.

தன் கணவன் இறந்தபின் பயனற்றதாகிய உடலை வெறுத்து இழித்துக்கூறுவாள், 'உடலார்' எனப் பரிகாசமரியாதைப்பன்மையாக உயர்த்துக்கூறினாள்.

பயிராயோ என்பதற்கு அருவாராயோ என்ற பொருள் மேலே கூறப்பட்டது. அதற்கு, அழையாயோ என்ற பொருள்கொண்டு 'நீ இறந்த துன்பத்தினால் செத்துத் தொலையாத குற்றமுடையேனாயினும்,

இதன்முன் மன்னித்ததுபோல் இப்போதும் மன்னித்து, இறந்த நீ யிருக்குமிடத்துக்கு என்னை வரும்படி அழையாயோ என்பாள் 'துயராலேதொலையாத என்னையும் பயிராயோ' என்றாளென்னலுமாம்.

செயிர்தீராய் என்பதை விதியைநோக்கிக் கூறியதாகக்கொண்டு, அதற்குக் குற்றம் நீங்கமாட்டாய் என்று பொருள் கூறப்பட்டது. அதை வாலியைநோக்கிக் கூறியதாகக்கொண்டு, 'நீ இறந்த துயராலே தொலையாதமைபற்றி என்மீது நீ கொண்ட கோபம் நீங்குவாயாக' என்றாளென்றும், 'என்னை அழையாது வாளா இருக்கின்ற நீ என்னை எப்போதும் போலத் 'தாரையே' என அழைத்து என் துன்பத்தை நீக்குவாயாக' என்றாளென்றும் பொருள்கூறலும் பொருத்தமாயிருத்தல் காண்க. தனக்கு விதியும் தெய்வமும் தன் கணவனே யென்பது பற்றி, அவனை 'விதியான தெய்வமே' என விளித்தாளென்றலும் ஒன்று.

உன்னைக் கொன்ற நமன் நன்றிகொன்றவ னெனல்.

493. "நறிதாம் நல்லமிழ் துண்ண நல்கலின்
பிறியா இன்னுயிர் பெற்ற பெற்றிதான்
அறியா ரோநம னார்! அ தன்றெனில்,
சிறியா ரோ!உப காரம் சிந்தியார்!"

இ-ள். "(நீ) அமிழ்தத்தை உண்ணும்படி அளித்ததனால் (தம் உடம்பினின்று) பிரியாத உயிரைப் பெற்றதன்மையை நமனார் அறியாதவர்போலும். அறியாதவரன்றெனில், (நீ செய்த) உபகாரத்தை நினைத்துப்பாராதவர் (ஆவர். அவர் அப்படி நன்றிமறக்கும்) அற்பரா? (ஆம்; அற்பரே: அதனால்தான் உன் உயிரைக் கவர்ந்தார்.)"

நறிது-நறுமையுடையது. நறுமை-நன்மணம். நல்கல்-கொடுத்தல். பிறியாத என்பது ஈறுகுறைந்த பெயரெச்சமாய்ப் பிறியா என நின்றது. பிறிதல், பிரிதல் இரண்டும் நீங்குதலென்னும் பொருளுடையன. பிரிதலெனவருதல் பெருவழக்கு. பெற்றி-தன்மை. சிறியர்-அற்பர். "நமனார் என்றவிடத்துப் பலர்பால் செறல் [—கோபம்] பற்றிவந்தது"

அமுது உண்ணநல்கலின் பிறியா உயிர்பெற்ற பெற்றி(யை) நமனார் அறியாரோ! அன்றெனில், உபகாரம் சிந்தியார் (ஆன) சிறியாரோ! என இயைக்க.



இதன்முன் என்றும் இவ்வளவுநேரம்
சிவபூசை செய்யாதிராயே எனல்.

[இருந்த இடத்திலேதானேயிருந்து ஒருகாலமே பூசைபுரியும் ஏனைய பூசகர்போலாது, நீ எண்டிசையிறுதிகளிலுஞ் சென்று ஒருகாலமன்றித் திரிகாலமுந் தினந்தவறாது சிவபூசைசெய்வாயே! இதன்முன் இவ்வளவுநேரம் பூசைக்குப் புறப்படாது தாழ்த்திருக்கமாட்டுவாயோ!

ஒருவார்த்தையும் உரைக்கின்றாயில்லையே எனல்.

என்றும் மென்மையான மலரணைமேல்வைகும் நீ, இன்று வன்மையான தரைமேற் கிடப்பதுகண்டு சகிக்கமாட்டாமல் நான் வருந்துவது கண்டும், நீ 'வருந்தாதே' யென்று ஒருவார்த்தைகூட உரைக்கின்றாயில்லையே! நான் செய்த குற்றந்தான் யாதோ?]

நான் மண்ணில் வருந்த, நீ விண்ணில் அடைந்தாய்:
நீ என்னை உன்னுயிரென்றது பொய்தானே எனல்.

494 "நையா நின்றனன்! நான்இருந் திங்ஙன்;
மெய்வா னோர்திரு நாடு மேவினாய்!
ஐயா, நீஎன தாவி யென்றதும்
பொய்யோ? பொய்உரை யாத புண்ணியா!"

இ-ள். "பொய்புகலாத புண்ணியனே, நான் மண்ணிலிருந்து துன்பமுறுவேன் (ஆக, நீ, இன்பமுறுவானாக) விண்ணடைந்தாய்! (நீ, என்னை நோக்கி) 'நீ என்னுயிர்' என்றது பொய்யோ? (பொய்யன்றெனில், உன்னுயிரென்ற நான் துன்புற, நீ இன்புறுவாயோ?)"

நைதல் - வருந்துதல். இங்ஙன் - இங்கே - இந்தப்பூமியிலே; இவ்வாறு என்றும் பொருள்கொள்ளலாம். மெய்யாக என்பது மெய் என்று சுருக்கிக்கூறப்பட்டது. ஐயன் - தலைவன்: ஐயா—(எனக்குத்) தலைவனே—(என்) நாயகனே.

நாம் ஒருவர்நெஞ்சுள் ஒருவர் இருப்பதாக
வீணெண்ணங்கொண்டிருந்தேமெனல்.

495 "செருவார் தோள,நின் சிந்தை உளேனெனின்,
மருவார் வெஞ்சரம் எனையும் வௌவுமால்;

ஒருவே னுள்உளே யாகில், உய்தியால் :
இருவே முள்இரு வேம் இருந்திலேம்."

இ - ள். "(நாம் இருவரும், ஒருவரையொருவர் கண்ட அன்றே, உன் நெஞ்சுள் நானும் என் நெஞ்சுள் நீயும் மாறிப்புகுந்து வாழ்வேமாயினேம். இந்த நிகழ்ச்சியின்படி) நான் உன் நெஞ்சுள் உள்ளேனென்றால், (உன்னை உருவிய) கொடிய அம்பு என்னையும் (உருவி உயிர்) கவர்ந்திருக்கும். (அப்படி நான் உருவப்படவில்லை) நீ என் நெஞ்சுள் உள்ளாயானால் (நான் உருவப்படாதிருப்பதனால், அந்த அம்பால் நீ உருவப்படாமல் தப்பிப்) பிழைத்திருப்பாய். (நான் உருவப்பட்டிறக்கவுமில்லை. நீ தப்பிப் பிழைக்கவுமில்லை. ஆதலால், நாம், காதற்பாவசத்தினால், ஒருவருள்ளே ஒருவர் இருப்பதாக, மனோராச்சியஞ் செய்தோமேயன்றி, உண்மையில்) இருவருள்ளத்தும் இருவரும் இருந்தேமில்லை."

செரு - போர். ஆர்தல் - தங்குதல்; பொருந்துதல்; நிறைதல். மருவார் - பகைவர்; இராமனைக்குறித்தது. முன், தாரை தன் கணவன் வாலியின் உயிர்கவர்ந்த நமனை வெறுப்பால் இகழ்ச்சிப்பண்மையாக 'நமனார்' என்றதுபோல, இப்போது வாலியைக்கொன்ற பகைவனை மருவார் என்றாள். சரம் - அம்பு. வௌவுதல் - கவர்தல். உருவி உயிர் கவர்தலென்பது, சுருங்கச்சொல்லும் நயம்தோன்ற, வௌவலெனப்பட்டது. ஒருவேன் - ஒருத்தி (யாகிய என்னுடைய). உள் - மனம். உளை - உள்ளாய்: முன்னிலைக் குறிப்புவினைமுற்று. உய்தல் -(அம்புக்குத் தப்பிப்) பிழைத்திருத்தல். 'உள்' (-மனம்) என்பது ஏழாம்வேற்றுமைத் தொகையாய் மனத்தினுள்ளே என்று பொருள்படநின்றது. இருவேம் - இருவராகிய நாம். இருவேம் உள் - நம்மிருவருடைய நெஞ்சினுள்ளும். இருவேம் - நாமிருவரும்.

இப்பாட்டு இராமனும் சீதையும் 'இருவரும் மாறிப்புக் கிதய மெய்தினார்' என்றதை நினைவுறுத்துகின்றது.

உன்னை உபசரித்து வானவர் வரவேற்றிருப்பாரே யெனல்.

["நீ விண்ணுலகம் நண்ணியபோது எண்ணிறந்த விண்ணவரெல்லாரும் எதிர்கொண்டுவந்து, பூமாரிபொழிந்து, மகிழ்வோடு வரவேற்று, "நீ அந்த அமிழ்தமுண்டு சாவினின்று தப்பினேம்" என்று நன்றிகூறி உபசரித்திருப்பாரே!



அமிழ்தத்தையே அளித்த நீ
செல்வத்தை அளிக்க மறுப்பையோ எனல்.

"இராமனென்பவன், உன்செல்வத்தைப் பெறத்தானே, உன்னை மறைந்துநின்று வாளியேவிக்கொன்றான்! அவன், உன் எதிரே வந்து, 'ஈவாய்' என்று ஒரு வார்த்தைகூறி அச்செல்வம் அனைத்தையும் பெற்றிருக்கலாமே. அமிழ்தத்தையே அளித்த நீ, செல்வத்தை அளிக்க மறுப்பையோ?"]

இங்கே யிறந்துகிடப்பவன் வேறோருவாலியோ எனல்.

496 "நீறும் மேருவும், நீ நெருக்கினால் :
மாறோர் வாளி,உன் மார்பை ஈர்வதோ!
தேறேன், யான்.இது, தேவர் மாயமோ!
வேறோர் வாலிகொ லாம்?வி ளிந்துளான்"

இ-ள். "நீ (உன் நெஞ்சொடுசேர்த்து இறுக்கி) நெருக்குவாயானால், மகாமேருபர்வதமும் தூளாய்விடுமே! (அப்படிப்பட்ட வன்மையுடைய) உன் நெஞ்சை (அதற்கு) எதிரிடையாக ஓர் அம்பு பிளத்தலாவதோ? (நீ அம்புருவி யிறந்துகிடத்தல், உண்மையோ, தோற்றமோ என்று) தெளியமாட்டுகிலேன். (ஒருவாறு தோற்றமேயென ஊகிக்கின்றேன்.) இத்தோற்றத்துக்குக் காரணம் (மனிதர் மாயவித்தையாகாதாதலால்,) தேவர்மாயமோ? (அஃதன்றெனில்,) இறந்துகிடப்பவன் (உண்மையில் வாலியாயில்லாது தோற்றத்தில் வாலியாயுள்ள) வேறொருவாலியோ?"

மாறு—எதிரிடை(யாக). ஈர்தல்—பிளத்தல். தேறுதல்—தெளிதல். வாலியின் வன்மையின்திறத்தில் தாரைக்குள்ள உறுதியான நம்பிக்கையினால், அவள் அவன் இறந்துகிடத்தலைக் கண்ணாற்கண்டும் கருத்தாற்காணமாட்டாளாய்க் 'கண்ணறிவோடு கருத்தறிவு மாறுபடுதற்குக் காரணம், கண்ணால் அவன் இறந்ததாகக் காணும் காட்சியும் உண்மையே, கருத்தால் அவன் உயிரோடிருப்பதாகக் காணும் காட்சியும் உண்மையே; ஒன்றற்கொன்று மாறான இரண்டு காட்சியும் உண்மையாக உணரப்படுதற்குக் காரணம், உண்மை வாலி இறவாமல் எங்கேயோ இருக்கவும், அவனை உருவத்தில் ஒத்த வேறொருவன் இறந்துகிடத்தலாயிருக்குமோ? என்று இயல்பாகக் கருதுவதைச் சுருக்கமாகவும் நுட்பமாக

வும் சொல்லும் 'வேறோர் வாலிகொலாம் விளிந்துளான்' என்ற, வியப்பும் ஙபப்பும் ஒருமிக்க விளைவிக்கும் வாக்கியம் ஒருதரமே கேட்டவர்உள்ளத் தும் நிலையாய்நின்று, நிலவி என்றும் நினைக்குந்தொறும், நினைக்குந் தொறும், நிரம்ப இன்பம் பயக்கும் இயல்பினதாயிருத்தல் காண்க.

இறந்தவாலியைக்கண்டு அவன் மனைவி தாரை வருந்திப்பலம்பிய தைப்பற்றிய 'வரைசேர்' என்பது முதலாக 'நீரும்' என்ப தீறாக உள்ள இன்கவித்தொகுதி, கம்பராமாயணத்திற் பல இடங்களிற் றொடர்பாகக் காணப்படும் சிறந்த செய்யுட்டொகுதிகளுள் ஒன்றென்பது தெளிவாம்.

## அநுமான் தாரையைத் தாதியரால் இருப்பிடஞ்சேர்ப்பித்து வாலிக்கு ஈமக்கடன் இயற்றுவித்தல்.

[தாரை இவ்வாறு புலம்பித் துக்கமேலீட்டால் உணர்விழக்க, அநுமான், அவளை அவளது தாதியரால் அவளிருப்பிடஞ் சேர்ப்பித்து, இறந்த வாலிக்கு இயற்றக்கடவனவான ஈமக்கடன்களை இயற்றுவித்து, அந்த விவரத்தை இராமனிடம் தெரிவித்தான்.

இராமன் சீதை பிரிவாற்றாமையால் வருந்தாநிற்க, மாலைப்பொழுதும் இராக்காலமும் கழிந்தன.

சூரியன் தனது தோன்றலான சுக்கிரீவன் பொற்கிரீடம் பூணும் விழாவைக்காணும் அவாவால் உற்றவன்போல உதயம் ஆனான்.

தாரைபுலம்புறு படலம் முற்றிற்று.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.




போகாதிகனென ௬
போதிக்குஞானப் ௧௨
போர்வந்த ௧௧௪
போராழி ௭
போற்றுமைக்காகம் ௭௯
மஞ்சரிக்குக் ௪
மஞ்சூட்டு ௩௨
மடைசாய்ந் ௮௮
மண்டார்கவி ௬௭
மண்படைவேதன் ௫௧
மணியாமெனத் ௨௦
மதலைக்கிரங்கிச் ௮௮
மதுவொழுகுந் ௩௮
மந்தாரத்தார்ப்புயத்தான் ௪௪
மருண்மாலைவாய் ௫௭
மருத்திகழ் ௯௩
மருத்தேர்வரிவண் ௭௨
மருந்தானதை ௧௫
மருப்போடை ௨௨
மருமலிதாமப் ௮௯
மல்லார்திரள்புயத் ௧௧௬
மல்லார்புயத் ௪௭
மழவைக்கரியென்ற ௧௦௫
மழுகாதசோதித் ௬
மழுவலங்காரனும் ௮
மழைத்தாரை ௪௭
மறங்காதலித்த ௭௪
மறவாரணஞ்சொன்ன ௧௧
மறவிருள்வாதியரைப் ௫௧
மறுத்தானுருத ௧௦௭
மறைகொண்ட ௭௧
மறைத்தழல்வாணர் ௬௯
மறைத்திறை ௩௮
மறைப்பான்மையைச் ௩௪
மறைபோலியற்றமிழ் ௫௬
மன்னுகிளையின்றியே ௮௪
மனதாற்பவித்திர ௭௬
மனவிலங்காகிய ௫௮
மாகத்தவருந் ௨௮
மாசயக்கொண்டு ௬௮
மார்தளிர்மேனியன் ௮௧
மாயாப்பிறவிப் ௫௪
மாயாபுரியைக் ௭௧
மார்கழிமூவைந்தின் ௭௦
மால்காட்டிய ௨
மாலைப்பொழுதி ௩௯
மாற்றம்புரியும் ௧௦௯
மாற்றூர்புறந்தந் ௭௧
மாறுஞ்சமய ௫௩
மாறுமுகத்தரை ௭௬
மீன்னுயிர்க்குங் ௫௦
மீகாமனின்றிக் ௨௭
மூகுந்தனவாவுற்று ௧௦௪
முலைக்கின்ற ௪௩
முடியானது ௯
முத்தாரணியொடு ௯௩
முத்திற்புனைந்த ௯௨
முதலையைக்காய்ந் ௧௩
முதிரும்புளக ௫௦
முதுவைப்பென ௬௧
முருகாரிலஞ்சித் ௧௦௬
முன்பகலே ௬௨
முனமாமதிக்கும் ௧௪
மூப்பாரிளமை ௪௧
மேய்க்கொண்டல் ௩௩
மெய்ச்சானகி ௧௧௫
மெய்ப்பாவலர் ௧௧௬
மெய்ப்புற ௪௭
மேகத்தினை ௬௫
மைதிகழ்பூம் ௧௮
யாணர்க்குருகைப் ௧௦௯
யாயேயெனவந்த ௫௮
யாவதியாவது ௬௫
வுடத்திற்றுயின்ற ௨௩
வடியார்சுடரிலை ௫௮
வடியார்திகிரிப் ௧௫
வடியுண்கயற்க ௧௦௩
வடுவிலையாமுத்தர் ௨௨
வண்டலம்பாவைத்த ௨௨
வண்டார்பொழிற் ௪௬
வண்டேய்பசுந் ௧௮
வண்பாவலர் ௧௧
வணங்காப்பாசமயர் ௪௯
வம்பமர்பூண்முலை ௧௦௧
வாருணமங்கைப் ௧௬
வார்துறந்தார்க் ௯௬
வரம்பார்வரிவளை ௮௨
வரியாடரவிற் ௬௫

| | |
|---|---|
| வருந்தினைசடல | அரு |
| வழுவாதபேரின்ப | ககங |
| வழுவாதவண்டமிழ் | ககூ |
| வளையாழி | கசு |
| வளையாழியங்கைத் | ருசு |
| வளையாழியங்கைப் | ஙஎ |
| வன்பனிக்காகிய | ககரு |
| வனக்குச்சரி | ருஉ |
| வனத்துளவேங்கை | சஉ |
| வாக்கைப்புரங் | கக |
| வாசம்பயில் | அ |
| வாதாம்பரசமயத்தை | உ0 |
| வாதிக்குநூற்றுவர் | ககரு |
| வாதுசெய் | க0சு |
| வார்வைத்தகப்படுத்திக் | உக |
| வாவிக்கமலத் | கவ |
| வாவுங்கடும்பரித் | அஉ |
| வாளுற்றகண்மடவாய் | எசு |
| வான்றூழ்பொழிற் | எசு |
| வானமர்சோலை | கச |
| வானவர்போற்றுங் | சக |
| வானிற்பரந்த | ககஅ |
| வானிறந்தோய்ந்த | உ0 |
| விச்சைத்தனக் | எஅ |
| விண்ணுதரித்தெழு | க0க |
| விண்ணுதரிப்ப | ஙசு |
| விண்ணியல்பாகப் | ஙஉ |
| விண்ணின்றுதேவர் | வ0 |
| விண்மேற்படர் | சுசு |
| விதிக்கின்ற | ருரு |
| விதிபெற்ற | எச |
| விரதம்பயில் | அச |
| விரித்துரையாய்த் | உங |
| விரிந்தாழ்கடற் | ககவ |
| விரிந்தாழ்பொருநைத் | கக |
| விரியும்பொருநைத் | உரு |
| வில்விற்செறிந்த | அசு |
| வில்வேடர் | கஉ |
| விழியிற்புலனுங் | ங0 |
| விழிவேட்டஞ்செய் | சு |
| விற்கொண்ட | க |
| வினவிற்பா | சுச |
| வீரைவளாகத்து | கச |
| வீழ்நாள்படாமை | க0ங |
| வேங்கடக்கரி | ககக |
| வெங்கயமூல | க0சு |
| வெட்சியுள்ளார் | கஉ |
| வெவ்விடத்தாரை | கசு |
| வெள்ளையம்போருக | சுசு |
| வெற்புடையானும் | கரு |
| வேட்டார்புதல்வற் | எ |
| வேதக்குழவியைத் | க0அ |
| வேதப்பொருளின் | உச |
| வேதாவுணர்தற் | எரு |
| வேரிப்பசுந் | கஉ |
| வேலைப்பொருவும் | அக |
| வேளையும்பார்த் | ங0 |
| வேற்றுளை | க0க |
| வேற்றுப்பரிமளக் | கக |


---

ஶ்ரீ:

# விஷயசூசிகை.

[ஆங்கில எண்கள் பாடலைக் குறிப்பன.]

## திருப்பதிகள்.


அத்திகிரி:— இது, அத்தியூர், கச்சி, கரிகிரி எனவும் வழங்கப்படும். 5, 9, 10, 45, 89, 145, 214, 216, 222, 265, 267, 285, 330, 37[illegible].
அகந்தபுரம் 26, 73, 390, 482
அயோத்தி 111, 177, 194, 200, 287
அரங்கம் 1, 2, 6, 21, 77, 80, 92, 152, 165, 178, 181, 227, 259, 261, 313, 326, 368, 411, 430, 431, 434, 444, 460, 497, 514
அரிமேயவிண்ணகரம் 282
அழுந்தூர் 69
அன்பில் 51, 114, 136, 186, 217, 273, 517
இடவெந்தை 118, 147, 477, 516
இந்தளூர் 32, 101
உறையூர் 37, 60, 116, 159, 290, 326, 479, 499, 509
ஊரகம் 140
எவ்வுள் 94, 106, 277, 294
கடன்மல்லை 23, 93, 138, 14[illegible], 301, 307, 321, 394, 475, 484
கடிகை 314, 360, 447
கண்டியூர் 36, 354
கண்ணபுரம் 404
கண்ணமங்கை 163
கவித்தலம் 148
கள்வனூர் 91
காட்கரை 3[illegible], 279
காரவானம் 292
காரகம் 501
காவளம்பாடி 466
காழிச்சீராமவிண்ணகரம் 20[illegible], 318
குடந்தை 48, 234, 254, 306
குருகூர்:— இது, குருகை, குருங்கை, குருகாபுரி, ஆழ்வார்திருநகரி எனவும் வழங்கப்படும். 3, 8, 12, 13, 16, 25, 31, 35, 81, 102, 105, 108, 109, 110, 112, 120, 133, 143, 146, 153, 167, 187, 198, 207, 229, 241, 249, 253, 256, 260, 272, 286, 295, 298, 300, 303, 309, 313, 316, 319, 320, 327, 333, 334, 336, 339, 350, 352, 356, 357, 359, 364, 365, 382, 386, 388, 391, 392, 397–401, 417, 423, 427, 437, 441–443, 448, 449–451, 454, 463, 464, 467, 470, 472, 473, 483, 486, 487, 489, 493, 496, 504–508, 522, 523, 526
குளந்தை 66
குறுங்குடி 28, 53, 250
கூடல் 133, 275, 326, 459
கோவலூர் 343, 403
சாளக்கிராமம் 485
சிங்கவேள்குன்றம் 189, 270, 465, 502
சிறுபுலியூர் 27, 168, 224, 374
சீவரமங்கை (வானமாமலை) 54, 68, 84, 135, 164, 197, 233, 315, 331, 437–440.
செம்பொன்செய்கோயில் 288
சேறை 49, 100, 115, 274, 296, 345
சோலைமலை 14, 39, 42, 43, 132, 160, 174, 276, 380, 383
தஞ்சை 11, 46, 90, 141, 238, [illegible]10, 513
தலைச்சங்கநாண்மதியம் 18, 210, 308, 405

திருக்கடித்தானம் 311, 491, 492
திருக்கோட்டியூர் 269, 416
திருக்கோளூர் 78
திருச்செங்குன்றூர் 428
திருத்தங்கால் 205, 230, 263, 323, 373
திருத்தண்கா 221, 228, 361
திருத்தெற்றியம்பலம் 206, 266
திருத்தேவனார்தொகை 184
திருநாங்கூர் 104, 192, 211, 433
திருப்புட்குழி 242, 245, 421, 490
திருப்புல்லாணி 126, 134
திருப்புலியூர் 119, 203, 264, 299, 325, 378
திருப்புளிங்குடி 72
திருப்பேர்நகர் 262, 305
திருமூட்டம் 47
திருமூழிக்களம் 379, 426
திருமெய்யம் 278, 435
திருமோகூர் 33, 52, 118, 130, 158, 252, 402
திருவண்பரிசாரம் 182, 348, 408
திருவண்புருடோத்தமம் 124, 144, 183, 235, 284, 310, 328.
திருவல்லவாழ் 20, 170, 223, 349, 376
திருவாட்டாறு 40
திருவாலி 384, 457
திருவாறன்விளை 476
திருவிண்ணகர் 44
திருவெள்ளறை (வெள்வரை யென்பது மிது) 157, 297, 322, 406
தில்லைச்சித்திரகூடம் 199, 236, 342
துவாரகை 67, 128, 191, 213, 317, 338, 351, 371, 393, 471, 503
தென்திருப்பேரை 55, 70, 79, 155, 162, 208, 358, 500
தொலைவில்லிமங்கலம் 75
நறையூர் 29, 56, 122, 218, 239, 283, 326, 375, 515
நாகை 17, 50, 127, 161, 289, 512
நாவாய் 429
நின்றவூர் 395, 410, 481
நீர்மலை 57
நீரகம் 96
பரமேச்சுரவிண்ணகரம் 418
பாடகம் 41, 61, 125, 154, 363, 419, 511
பார்த்தன்பள்ளி 432, 436
பிரிதி 89, 30[illegible], 452
புள்ளம்பூதங்குடி 117, 524
பெரும்பூதூர் 392
மணிமாடக்கோயில் 446
மயிலை 99, 246
வடமதுரை 424
வதரி 103, 156, 226, 255
வரகுணமங்கை 63
விருந்தாவனம் 58
வில்லிபுத்தூர் 281, 358, 385, 453
விற்றுவக்கோடு 258, 387
வீரை? 495
வெஃகா 220, 353, 521
வேளுக்கை 150
வேங்கடம் (வடமலை) 7, 15, 30, 64, 65, 86, 97, 98, 107, 129, 171, 257, 355, 362, 377, 420, 425, 468, 469
வைகுந்தவிண்ணகர் 190
ஸ்ரீவைகுந்தம் 22, 62, 65, 123, 180, 204, 407

நாடுகள்.

ஆவிநாடு 384, 457
தமிழ்நாடு 2
மல்லிநாடு 385, 498, 518
வழுதிநாடு 105, 151, 215, 340, 352. 462, 478, 519

நகரங்கள்.

கொற்கை 2
புகார் 2
மிதிலை 17, 308, 514

அரசர்கள்.

சனகன் 308
சீவலவன் 391
சேரன் 2
சோழன் 2
பலராமன் 424
பாண்டியன் 2



மலைகள்.

கயிலாயம் 132, 194
குடரி 24, 71, 81, 109, 121, 129, 188, 212, 219, 237, 241, 243, 247, 251, 319, 332, 366, 367, 396, 401, 441, 443, 445, 463, 466
பொதியம் 112, 172, 244, 249. 300, 409, 442, 469

ஆறுகள்.

காவிரி 77, 367, 368, 472
பொருநை 102, 105, 146, 207, 300, 319, 327, 334, 340, 352, 359, 417, 448, 520

துறை.

திருச்சங்கணித்துறை 102, 300, 327

பெரியார்.

அகலிகை 83
அருந்ததி 38, 144, 460
ஆண்டாள் 358
இராமானுஜர் 392
கணிகண்ணன் 220
நங்கை 467
நப்பின்னை 106, 452
பெரியாழ்வார் 358
பொய்யாமொழியார் 133
மாறன் 3, 4, 8, 12, 13, 16, 19, 24, 31, 34, 35, 59, 71, 74, 76, 81, 82, 87, 88, 95, 102, 105, 108, 110, 112, 120, 121, 129 131, 137, 139, 143, 146, 149, 151, 153, 166, 169, 172, 173, 175, 176, 179, 185, 188, 193, 195, 196, 198, 201, 209, 212, 215, 219, 225, 229, 232, 237, 240. 241, 243, 244, 247, 248, 249, 251, 252, 253, 256, 260, 268, 271, 272, 280, 291, 293, 295, 298, 300, 303, 304, 306, 309, 312, 313, 316, 319, 320, 324, 327, 329, 332–336, 337, 340, 341, 344, 346, 347, 350, 352, 356, 357, 359, 366, 367, 370, 381, 382, 386, 388, 389, 391, 392, 396,–401, 409, 412-415, 422, 423, 427, 437, 441–443, 445, 448–451, 454, 455, 458, 461-464, 467, 469, 470, 472–474, 478, 480, 486–489, 493, 494, 496, 504-506, 508, 519, 520, 522, 523, 525–527
வசிட்டன் 460
வள்ளுவர் 116

நூல்கள்.

திருக்குறள் 41, 116
திருவாய்மொழி 448, 464, 494

கதைகள்.

அநுமன்—
 இராமன் வரவு பரதற்குணர்த்தியது 331
 கடறாவியது 177
 சனகியைக்கண்டமை கூறியது 75
இராமன்—
 அகலிகைக்கருளியது 56, 83, 420
 அநுமனுடன் ஒருகலத்துண்டது 383
 இராவணனைவென்றது 20, 218, 287, 338, 451
 கடலில் அணைகண்டது 280
 கரனை வென்றது 194
 மராமரமெய்தது 191, 244, 517
 மிதிலையிற் றனுவளைத்தது 308, 514
கச்சித்திருமால் கணிகண்ணன்பின் சென்றது 220, 521
கண்ணன்—
 கன்மழைகாத்தது 332
 கன்றால் விளங்கனியுதிர்த்தது 311, 468
 காளிங்கநர்த்தனஞ்செய்தது 208
 கோவர்த்தனத்தைக் குடைகொண்டது 116, 157
 கோவியர்க்குக் கூறையளித்தது 145
 தயிர்கட்டுண்டு தாம்பாற்கட்டுண்டது 230, 254, 330

தேவதருவைக்கொணர்ந்தது 54
பகலில் இரவு வருத்தியது 217, 285
பரீக்ஷித்தையுயிர்ப்பித்தது 471
பாண்டவர்க்குத் தூது சென்றது 125, 154, 363, 449, 474, 511
பின்னைக்குப் பொற்கா வழங்கியது 9
பின்னையை மணந்தது 106
புள்வாய் பிளந்தது 119
பூதனையைவதைத்தது 266, 288
விசயற்குத் தேரூர்ந்தது 104
சங்கத்தார் பொய்யாமொழியாருடன் உரையாடியது 133
சிவபிரான்—
உமாதேவிக் கிடப்பாகமளித்தது 366
கபாலத்திற் பிச்சையேற்றது 101
திரிபுரமெரித்தது 21
சீவகன் சுரமஞ்சரிக்குங் குணமாலைக்கும் நடுவுரைத்தது 10
திருப்பாற்கடல் கடைகையில் விடமெழுந்தது 490
திருமால்—
இரணியன்முன் தூணிற்றோன்றியது 502
உலகளந்தது 66, 110
கடல்கடைந்தது 307
கஜேந்திரற்கருளியது 46, 47, 199, 239
சிவபிரானிரப்பொழித்தது 99, 278
தேவர்க்கு அமுதூட்டியது 114, 468, 503, 524
வராக மாயது 54, 397
வராகமாய்ப் பூமியை மருப்பிற் கொண்டது 135
வாமனனாயது 509
திருவிக்கிரமன்றாளிற் கங்கை பிறந்தமை 509
பலராமன் பூமியிரந்தியது 424
மாறனைவேதந்தமிழ்செய்தது 74, 102, 291


## பல பொருள்.


அக்காரக்கனி—கடிகைத்திருமால் 314, 360
அஞ்சனம் 183
அத்தியூர்—கச்சி 265
அநந்தை—திருவநந்தபுரம் 390
அருமாகடல் — சிறுபுலியூர்த்திருமால் 168
அருளாளர்—அத்திகிரித்திருமால் 5
அலங்காரன் — சோலைமலைத்திருமால் 39
அழகர்—சோலைமலைத்திருமால் 132
அன்றில் 207
ஆசாரம் பக். க
ஆதிநாதன்—குருகைத்திருமால் 109
ஆமை தன்குஞ்சை நினைந்தே வளர்த்தல் 351
ஆயிரங்கவி } — திருவாய்மொழி 34, 448, 464
ஆயிரந்தமிழ் }
ஆராவமுதன்-குடந்தைத்திருமால், 48, 234
ஆரிடம் பக், க
இந்தளம்—ஓர் பண் 238, 259
இந்நூலாசிரியர் எற்பாட்டுக்குரிய பொழுது பொழுதுபடு நேரமென்று கூறல் 310
இராக்கதம் பக். க.
இருள்வருணனை 209, 291
இலஞ்சி—வகுளம் 472
இளவேனில் 518
உடையநங்கை—சடகோபர்தாய் 388
உறங்காப்புளி—சடகோபரெழுந்தருளியுள்ள புளி 248, 249, 341, 417
உறங்காப்புளி சேடாவதாரமென்பது 391
உறந்தை—உறையூர் 116
உறை—மருந்து 59, 279
எட்டிடை 294
எண்வகைமணம் பக். க
எள்ளளவு 335
எற்பாடு 178, 310
ஐந்திணைக்குமுரிய மணம் பக். க.
ஐந்திணையும் வந்த பாடல் 404
ஐயானனன்—சிவன் 278





ஓடியெறிதல் 238
கச்சிவெற்பு—அத்திகிரி 83
கட்டுண்ட—களவுசெய்துண்ட 250
கப்புரம்—கற்பூரம் 140
கரிகிரி—அத்தகிரி 9
கல்வியுங் கவித்திறமையும் வாய்ந்த வுமந்தனைப் பெற்றோர் மகிழ்தல் 39
கழை { வேய்ங்குழல் 141
{ கரும்பு 303
கள்வன்—ஸ்ரீவைகுண்டத்திருமால் 62
களவிற்குரியகிளவித்தொகை 19 பக் ௩
களவுவெளிப்பாடற்குரியகிளவித்தொகை பக்—அ0.
கற்பாவது பக்—க0உ.
கற்பிற்குரியகிளவித்தொகை பக். க0உ
காசினிவேந்தன்—புளிங்குடித் திருமால் 72
காந்தருவம் பக்—க.
கார் 511
காரிமாறன்—சடகோபன் 16, 108, 241
காலை 310
காழில்கனி—வாழைப்பழம் 468
காளமேகம்—மோகூர்த்திருமால் 33, 52, 130, 402
கிழி 128
குச்சரி—ஓர்பண் 238, 259
குடத்துவிளக்கு 98
குடமுழா 253
குபேரன்—சந்திரன் 85
குருகூர் ஆழ்வார்ஸந்நிதிவிமானம் சீவலபாண்டியனமைத்ததென்பது 391
குழைக்காதர் — தென்றிருப்பேரைத் திருமால் 70, 79
குறட்கருத்துவந்தசெய்யுள்கள் 24, 41 79, 115, 134, 151, 353, 379, 460, 465, 466
குறிச்சி 105
கூடல்வளைத்தல் 326
கூதிர் 513
கைக்கிளைக்குரிய மணங்கள் பக்—க.
கொடிச்சி 105
கொற்றவள்ளை 302
கோளி 249
சடகோபர் அன்னக்கொடிகொண்டமை 166
சிங்கநோக்கு 35
சின்னம்—காளம் 231
சுந்தரத்தோளழகர்—சோலையமலைத் திருமால்—39
செவ்வழி—ஓர்பண் 503
சொக்கநாரணர் — திருக்கோட்டியூர்த் திருமால் 269
தந்திவெற்பு—அத்திகிரி 5
தமிழ்வேதம் 35, 102, 520
தாமரைமுத்து 302
தாரை—கண் 70, 262
தாரை—வழி 427
திருப்பாற்கடல் 435
துவரை—துவாரகை 393
தூரியக்கோல்—எழுதுகோல் 131
தெய்வம் பக்—க.
நங்கை—உடையநங்கை—சடகோபர்தாய் 247, 437
நண்பகல் 178
நம்பி—நறையூர்த்திருமால் 29
நாரணன்—வதரித்திருமால் 255
நாவலந்தீவு 508
நாவீறன்—சடகோபன் 209, 496
நாற்பத்தெட்டியாண்டுக்குமேல் துறக்கவேண்டுமென்பது 526
நைவளம்—ஓர்பண் 238, 259
பத்தராவி—திருக்கண்ணமங்கைத் திருமால் 163
பராங்குசன்—சடகோபர்திருநாமம 382, 470
பரிபுரம்—சிலம்பு 418
பழமொழிகள் வந்த செய்யுட்கள் 114, 117, 118, 182, 265, 374
பற்பநாபன்—அநந்தபுரத்துத் திருமால் 26
பாயாதவேங்கை—வேங்கைமரம் 346
பாவலர்தம்பிரான்—சடகோபன் 178
பிடாரர் 358
பிணை—பார்வைமிருகம் 90
பிரமம் பக். க.
பிராஜாபத்யம் பக். க
பின்பனி 516, 522

புண்ணியகோடி – அத்திகிரிவிமானம் 45, 372
புதுவை—வில்லிபுத்தூர் 281
பூதாரதிபன்—இராமாநுஜன் 392
பூதாரதிபன்பதி – குருகூரி லுள்ள உடையவர்சந்நிதி 392
பெருந்திணைக்குரியமணங்கள் பக். க.
பேது—பேதைமை 474
பைசாசம் பக். க.
பொருநைத்துறைதோய்வலம்புரி-சங்கராஜன் 334
பொலிந்துநின்றபிரான் – குருகூர்த்திருமால் 25, 286
பொறி 130
பொறித்தல் 187
பொன்—இலக்குமி 110
பொன்னி—காவிரி 366
போந்து—பனை 127
போனகம்—உணவு 265
மகன்றில் 185
மகிழ்மாறன்—வகுளமாலையுடைய சடகோபன் 143
மதிக்கண்மான் 52
மருந்து—அமுதம் 114
மரைம்பால் 174
மழவு 471
மழைத்தாரைக்குப் பாம்புவமையாதல் 209
மன்மதனுக்குக் கரும்புசிலையாதல் 303
மன்மதனுக்குத் தென்றல் தேராதல் 303
மாடகம்—முறுக்காணி 446
மாலை 178
மீருதசிவளி 111
முக்கோற்பகவர் 498
முசுக்கலை—ஆண்குரங்கு 212
முப்பால்—குறள் 116
மும்மைத்தமிழ்—இயல் இசை நாடகத் தமிழ் 153
மூரம்பு—மேட்டுநிலம் 376
முன்பனி 516
மோகை—திருமோகூர் 130, 402
யோகத்தாற்றிருமாலையெய்தினவர் பேரின்ப மெய்துதல் 168
வங்கம்—கப்பல் 118
வடந்தை—வாடை 306
வடமலை—வேங்கடம் 86, 98
வடமீன்—அருந்ததி 144, 460
வண்டல—மகளிர் விளையாட்டிடம் 150
வதுவை—மணம் 120
வரமங்கை—வானமாமலை 164
வரைவிற்குரிய கிளவித்தொகை பக். எஙு.
வரைவுக்குரிய காரணவகை வந்தவாறு பக். எஙு.
வரைவுக்குரியார் பக். எஙு.
வரைவுநிகழுங்கால் முதன் மூன்றூர்ஞர் தலைவன் தலைவியர் கூட்டமின்மை 400
வரைவுநிகழுமாறும் வகையும் பக். எஙு.
வல்லியம்—சிங்கம் 219
வளர்பிறையுந் தேய்பிறையும் 78
வாயுறை—உணவு 265
வாலி 70
விண்ணோர் குரவன்—பிரமன் 333
விது—சந்திரன் 281
வில்லிபுத்தூர்வந்த பெண்ணரசு—ஆண்டாள் 358
விலைகாரியர்—பரத்தையர் 496
விற்கிடை 330
வேள்—மன்மதன் 250
வேளடிதொட்டுச்சூளிடல் 349, 350
வேனில் 525
வைத்தமாநிதி-திருக்கோளூர்த்திருமால் 78, 281


மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1931-ம் வருஷ ஏப்பிரல்மாத வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1931 ஏப்பிரல் | வரவு 1930 ஏப்பிரல் | விவரம். | செலவு 1931 ஏப்பிரல் | செலவு 1930 ஏப்பிரல் |
|---|---|---|---|---|---|
| I General Section: | | | I General Section: | | |
| (1) கல்லோலை வகையில் வரவு... | [illegible] | | (1) சங்கம் மானேஜ்மெண்டா பீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 124 13 11 | |
| (2) மாதச்சந்தா வகையில் வரவு | 90 ... | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 ... ... | |
| (3) பாங்கில் போடப்பட்டிருந்த தொகைக்கு வட்டி வகையில் வரவு | 625 ... ... | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது ... | 140 10 7 | |
| (4) [illegible] விடுதிக்கு மாத வாடகை வரவு | 28 ... ... | | (4) Stationery contingencies வகையிற்செலவு | 5 9 ... | |
| (5) Miscellaneous—வரவு ... | 1 11 ... | | | | |
| மொத்தம் ரூ ... | 3189 11 ... | 1085 15 ... | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | |
| (1) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 43 | 9 | ... | | |
| (2) செந்தமிழ்ப் பழையதொகுதிகள் விற்றவகையில் வரவு. ... | ... | 8 | ... | | |
| மொத்தம் ரூ ... | 44 | 1 | ... | 417 | 3 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) சங்கக்கலாசாலை உபயோகத்துக்குப் புத்தகம் வாங்கிய வகையிலும், பாண்டியன் புத்தகசாலைக்கு வரும்பத்திரிகைகளுக்குச் சந்தாசெலுத்தியவகையிலும் செலவு ... | 8 | ... | ... | | | |
| (6) தபால், தந்திவகையிற் செலவு | 3 | ... | ... | | | |
| (7) சங்கமாசிக சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு... | 9 | 8 | ... | | | |
| (8) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ... | 13 | 3 | 9 | | | |
| மொத்தம் ரூ ... | 431 | 13 | 3 | 448 | 13 | 5 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக [illegible] னெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவானது. ... | 2 | 1 | ... | | | |
| (2) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ... | 151 | 8 | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சுக்கூலி வகையில் வரவு ... | 142 | 4 | ... | | | |
| (2) ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரையம் வரவு ... | 6 | ... | ... | | | |
| (3) பைண்டிங்கூலி வகையில் வரவு ... | 63 | 8 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 211 | 12 | ... | 338 | 10 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) தபால், தந்திவகையிற் செலவானது. ... | 9 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 162 | 9 | ... | 213 | 13 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சாபீஸிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்வானது ... | 139 | 8 | 7 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 15 | 3 | ... | | | |
| (3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்வானது | 32 | 0 | 4 | | | |
| (4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு | 11 | 2 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 198 | 6 | 11 | 224 | 1 | 5 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 3445 | 8 | ... | 1836 | 12 | ... |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ... | 10144 | 3 | 6 | 7277 | ... | 11 |
| ஆகமொத்தம் ரூ ... | 13589 | 11 | 6 | 9113 | 12 | 11 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆக மொத்தம் செலவு ரூ ... | 792 | 13 | 2 | 886 | 11 | 10 |
| மாத முடிவில் மீதி இருப்புத் தொகை} ரூ ... | *12796 | 14 | 4 | 8227 | 1 | 1 |
| ஆகமொத்தம் ரூ ... | 13589 | 11 | 6 | 9113 | 12 | 11 |

*By M. U. C. C. S. Pass Book Rs. 5000– 0– 0
M. R. C. C. Bank Pass Book Rs. 4544–12– 0
Investment in Rm. P. Vm. Firm, Madras Rs. 2500– 0– 0
Cash on hand Rs. 752– 2– 4

12796–14– 4

*Audited and found correct,*
V. S. RAMASWAMI,
AUDITOR,
27—6—31.

LAKSHMINARAYANAN,
*Manager*,
MADURA TAMIL SANGAM.
5—5—1931.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1931-ம் வருஷ மேமாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1931 மே | | | 1930 மே | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION : | | | | | | |
| (1) நன்கொடைவகையில் வரவு. | 2 | ... | ... | | | |
| (2) மாதச்சந்தாவகையில் வரவு... | 100 | ... | ... | | | |
| (3) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 37 | 12 | 6 | | | |
| (4) மதுரை M.R.C.C. Bank-ல் வட்டிக்குக்கொடுக்கப்பட்டிருந்த Fixed Deposit தொகை வாயிதா முடிவு பெற்றதால் திரும்பவாங்கியது. | 25011 | 5 | ... | | | |
| (5) சங்கக்காலிவிடத்துக்கு மாத வாடகைவரவு ... | 28 | ... | ... | | | |
| (6) Miscellaneous-வரவு ... | 2 | 12 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 25181 | 13 | 6 | 300 | ... | ... |

| விவரம் | செலவு 1931 மே | | | 1930 மே | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION : | | | | | | |
| (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 131 | ... | ... | | | |
| (2) சங்கக் கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 | ... | ... | | | |
| (3) Stationery, contingencies வகையிற் செலவு ... | 1 | 12 | 3 | | | |
| (4) தபால், தந்திவகையிற்செலவு | 2 | ... | ... | | | |
| (5) மதுரை M.R.C.C. Bank-ல் வட்டிக்குக் கொடுக்கப்பட்டு வாயிதா முடிவுபெற்ற Fixed | | | | | | |

55

## II Editorial Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தாவகையில்வரவு ... | 20 | ... | ... | | | |
| 2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 86 | 5 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 106 | 5 | ... | 145 | 5 | .. |

## III Press Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அச்சுக்கூலிவகையில் வரவு | [illegible] | | | | | |
| ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரயம் வரவு ... | 12 | 13 | 6 | | | |
| பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 57 | 14 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 156 | 6 | ... | 92 | 2 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Deposit தொகையை மறுபடியும் ஷை பாங்கிலேயே வட்டிக்குக் கொடுத்திருப்பது. | 25011 | 5 | ... | | | |
| மொத்தம் ரூ | 25273 | 1 | 3 | 273 | 5 | 6 |

## II Editorial Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ... | 1 | 14 | ... | | | |
| (2) ஷை புத்தகங்கள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு. ... | 105 | 12 | ... | | | |
| (3) தபால், தந்திவகையிற்செலவு | 15 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 122 | 10 | ... | 281 | 7 | ... |

## III Press Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 107 | 10 | 11 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery contingencies வகையிற் செலவு. | 23 | 5 | 6 | | | |
| (3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 38 | 5 | 4 | | | |
| (4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 15 | 12 | 6 | | | |
| மொத்தம் ரூ. ... | 180 | 2 | [illegible] | 215 | 8 | 9 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 25444 | 8 | 6 | 537 | 7 | ... | ஆகமொத்தம் செலவு ரூ. | 25575 | 13 | 6 | 720 | 5 | 3 |
| மாத [illegible] ரூ. ... | 12796 | 14 | 4 | 8227 | 1 | 1 | மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ரூ. ... | *12665 | 9 | 4 | 8044 | 2 | 10 |
| ஆகமொத்தம் ரூ. ... | 38241 | 6 | 10 | 8764 | 8 | 1 | ஆகமொத்தம் ரூ. ... | 38241 | 6 | 10 | 8764 | 8 | 1 |

*By M. U. C. C. S.
Pass Bk. Rs. 5000– 0– 0
M.R.C.C. Bank
Pass Bk. Rs. 7186– 8– 6
Cash on hand Rs. 479– 0–10

12665– 9– 4

LAKSHMINARAYANAN,
*Manager*,
MADURA TAMIL SANGAM.
11—6—1931.

*Audited and found correct.*
V. S. RAMASWAMI,
AUDITOR.
5—11—1931.

## மதுரைத்தமிழ்ச்சங்க[illegible] விற்கப்பெறும் புத்தக[illegible]

### [illegible]ம்.

| | | | |
|---|---|---|---|
| ஞானாமிர்த மூலமும் உரையும் ... | 1 | [illegible] | |
| சைவமஞ்சரி ... | 1 | 8 | [illegible] |
| யாப்பணியிலக்கணங்கள் ... | 0 | 10 | 0 |
| வைத்தியசாரசங்கிரகம் ... | 5 | 0 | 0 |
| பன்னூற்றிரட்டு ... | 3 | 0 | 0 |
| மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... | 4 | 0 | 0 |
| தோத்திரத்திரட்டு ... | | | |
| தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம் | 6 | 0 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் ... | 4 | 8 | 0 |
| ஷை மூன்றாம்பாகம் ... | 5 | 0 | 0 |
| அபிதானசிந்தாமணி ... | | | |
| தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| திருவருணைக்கலம்பகம் ... | 0 | 6 | 0 |
| அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| கலைசைச்சிலேடைவெண்பா ... | 0 | 5 | 0 |
| தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| திருவாரூர் நான்மணிமாலை ... | 0 | 4 | 0 |
| சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... | | | |
| பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... | 0 | 4 | 0 |
| திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

### செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | |
|---|---|---|---|
| ஐந்திணையைம்பது உரையுடன் ... | 0 | 3 | 0 |
| கனு நூல் (5) இனியநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| வளையாபதிச்செய்யுட்கள் ... | | | |
| புலவராற்றுப்படை ... | 0 | 3 | 0 |
| நேமிநாதம் (உரையுடன்) ... | 0 | 12 | 0 |
| திருநூற்றந்தாதி (உரையுடன்) ... | | | |
| திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| அநுமானவிளக்கம் ... | 0 | 2 | 0 |
| அட்டாங்கயோகக்குறள் ... | | | |
| விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம் ... | | | |
| பன்னிருபாட்டியல் ... | 0 | 4 | 0 |
| நான்மணிக்கடிகை (பழைய உரை) ... | 0 | 2 | 0 |
| முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... | 0 | 3 | 0 |
| திருச்செந்திற்கலம்பகம் ... | 0 | 8 | 0 |
| திருவாரூருலா ... | 0 | 12 | 0 |
| சுகசந்தர்சனதீபிகை ... | 0 | 4 | 0 |
| இயற்கைப்பொருட்பாடம் ... | 0 | 3 | 0 |
| தேவையுலா ... | 0 | 2 | 0 |
| நரிவிருத்தம் ... | | | |
| சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... | | | |
| திருக்கலம்பகம் (ஷை) ... | | | |
| விக்கிரமசோழனுலா ... | 0 | 1 | 0 |
| குருமொழிவினாவிடை ... | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | சேவப்பெருமான் இரட்டைமணிமாலை ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத் திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | [illegible] |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 8 | [illegible] |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | [illegible] |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | [illegible] |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திர நூறுபாட்டுக்குரை ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 8 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100 செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார் காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... ... | 1 | 4 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:- 1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷய[ங்]களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 4—8—0. இதுவரை 28 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அ[தற்கு] மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 [வீதம்] கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.